₹10

fmpb

# அறைகூவல்

Volume 53 Issue 11 November 2023

*அதற்குக் கர்த்தர் நீ போ; அவன் புறஜாதிகளுக்கும் ராஜாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்துகொண்ட பாத்திரமாயிருக்கிறான். – அப்போஸ்தலர் 9:15*

நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்
ஆகாய் 2:23

2023-ம் ஆண்டின் நோக்கம்

# சந்திக்கப்படாதோரை

## சுவிசேஷத்தால் சந்திக்க தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்



# ஆரம்ப வரிகள்...

## SOS




நடுக்கடலில் மூழ்கிக்கொண்டிருந்த கப்பலிலிருந்து SOS (Save our soul / save our ship) என்ற குறுஞ்செய்தி மட்டுமே அனுப்ப அக்கப்பலின் மாலுமிக்கு நேரம் இருந்தது. இந்த SOS என்பது ஒருவிதமான குறியீடு (Signal) ஆகும். இக்குறியீடானது ஆபத்தில் இருக்கும் ஒருவருக்கு உடனடி உதவி தேவை என்பதைக் குறிக்கும். இக்கப்பலிலிருந்த ஆயிரக்கணக்கானோர் தாங்கள் காப்பாற்றப்படுவோம் என்ற நம்பிக்கையோடு கையில் கிடைத்ததைப் பிடித்துக்கொண்டு மிதந்துக் கொண்டிருந்தனர். ஆபத்திலிருந்தவர்கள் தங்கள் நம்பிக்கையை இழக்கும் தருவாயில் உதவிப்படகு ஒன்று அவ்விடத்திற்கு வந்தது. அதிலிருந்த குழுவினர்கள் கயிறுகளை கடலுக்குள் எறிந்து மக்களைக் காப்பாற்றி வந்தனர். குறுகிய காலத்தில் காப்பாற்றப்பட வேண்டிய நபர்கள் அதிகம் இருந்ததால், காப்பாற்றப்பட்டு கப்பலில் ஏற்றப்பட்டவரை நோக்கி ஆபத்திலுள்ளவர்களைக் காப்பாற்ற கைகொடுக்குமாறு வேண்டினார்கள். அதற்கு ஒரு சிலரே செவிச்சாய்த்தனர். ஆனால் அதில் அநேகர் கப்பலின் மேல் தளத்திலுள்ள இருக்கைகளில் சௌகரியமாக அமர்ந்துக் கொண்டனர்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, நித்திய ஆக்கினைக்குத் தப்பின பின்பு, நாம் சிறிது நிம்மதியடைந்து விடுவோம். ஆனால் இரட்சிக்கப்பட்ட நமக்கு இரண்டு தெரிவு உண்டு. ஒன்று வாழ்க்கை என்னும் படகில் சுகபோகமாகப் பயணிக்கலாம்; இல்லையென்றால் இரண்டாவது, களத்தில் இறங்கி நித்திய அழிவின் கொடிய ஆபத்தில் உள்ளவர்களை மீட்கும் பணியில் கைகொடுக்கலாம். கிறிஸ்தவர்களுக்கு எதிரான சதிகள் மற்றும் செயல்களுக்கு மத்தியில் நம் கிறிஸ்தவ நம்பிக்கையையும், பயணத்தையும் ஒளித்து வாழ்ந்திடக் கூடும். அதன் மத்தியில் நித்தியத்திற்கான மிகப்பெரிய மீட்புப் பணியின் ஒரு பகுதியாக நம்மை ஈடுபடுத்திக்கொள்ள தேவன் நமக்கு ஒரு அற்புத வாய்ப்பினைத் தந்துள்ளார். நாம் சௌக்கியமாக இருக்கும் பகுதிகளிலிருந்து சற்று நகர்ந்து நம் கரங்களையும், முழங்கால்களையும் இம்மீட்பு பணியில் முனைந்திருக்கும் ஊழியர்கள் மற்றும் வேதத்தை கற்றுத் தருவோருக்குக் கைகொடுப்பதற்கு இதுவே சிறந்த வேளையாகும்.

தேவன் பவுலை இரட்சித்து அவரை “புறஜாதிகளுக்கும், ராஜாக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் தேவ நாமத்தை அறிவிக்கும் பொருட்டு தெரிந்துகொண்டேன்” என்று அப்.9:15-ல் குறிப்பிடுகிறார். பவுலும் அப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கூறியதாவது “...கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்” (ரோ.15:21). ஒரே இடத்திலே சீஷர்களை உருவாக்காமல் (நம்பிக்கைக்குரிய விசுவாசிகளிடம் சபையைக் வளர்க்க ஒப்படைத்தார்) புதிய பகுதிகளுக்கு, இனங்களுக்கு, மக்களுக்கு சுவிசேஷத்தைக் கொண்டுச் செல்ல விரும்பினார். மிஷனரி ஊழியத்தில் தேவன் பவுலுக்குக் கொடுத்தப் பொறுப்பு இதுவே. ஏனென்றால், தேவனுடைய இதயம் கிறிஸ்துவை அறியாதோருக்காகத் துடித்துக் கொண்டிருக்கிறது. இதற்காக பவுல் தன் ஜீவனையே நஷ்டப்படுத்தத் துணிந்தார். ஒவ்வொரு தேசத்தாரும், மக்கள் இனங்களும், மொழிக்காரர்களும் திரள் கூட்டமாக அவரை ஏற்றுக்கொண்டு அவரை துதிப்பதுவே தேவனின் இதயத்தின் வாஞ்சையாகும். சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது என்ற FMPB-யின் தரிசனத்திற்கிணங்க நம்மையும் இம்மாபெரும் மீட்பின் பணியில் இணைத்துக்கொண்டு நமது பங்கை நிறைவேற்றுவோமாக!

– **மெர்சி செல்வின்** *(தகவல் தொடர்புத்துறை)*

நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன்.
*– ரோமர் 15:21*

தேவன் அசாதாரணமான காரியங்களைச் செய்ய மனிதர்களைத் தேடுகிறார். ஆனால், என்ன ஒரு பரிதாபம் நாமோ நம்மால் செய்யக் கூடியதை மாத்திரம் செய்யத் திட்டமிடுகிறோம். *A.W. டாசர்*

பலவீனரை ஆதாயப்படுத்திக் கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.
*1 கொரிந்தியர் 9:22*

ஆத்துமாக்களை வெல்பவர்கள் முதலில் ஆத்துமாக்களுக்காய் அழுபவர்களாய் இருக்க வேண்டும் – *சார்லஸ் ஸ்பர்ஜன்.*


# அறைகூவல்

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப் பூ**

ஆசிரியர்: S. ஜாண் பெர்லின்

| | |
|---|---|
| தனிப்பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |



*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை - 53. தொலைபேசி: 044-26570404
பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**
சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**
தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்துகொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

**feedbackfmpb@fmpb.org**
உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.



# பொதுச்செயலாளரிடமிருந்து...

சந்திக்கப்படாதவர்களைச் சந்திக்கும் ஊழியத்தின் அன்பு பங்காளர்களே!

அறுவடை தேவனின் வல்லமையான நாமத்தில் வாழ்த்துக்கள்!

ஜம்மு மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் ஊழியத்தினை முடித்துவிட்டு திரும்பும் வழியில் டெல்லியிலிருந்து இந்த மடலை எழுதுகிறேன். கர்த்தரால் ஒப்படைக்கப்பட்ட இந்த ஊழியத்தினை நமது ஊழியர்கள் அர்ப்பணத்துடனும், உற்சாகத்துடனும் செய்து வருகின்றார்கள். யோவான் 3:27 இவ்வாறாக கூறுகிறது. 'பரலோகத்திலிருந்து ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய அவன் ஒன்றையும் பெற்றுக்கொள்ளமாட்டான்.' நமக்கு கொடுக்கப்பட்டவைகளுக்காக மற்றும் கொடுக்கப்படாதவைகளுக்காக நாம் திருப்தியுடன் தேவனுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும் என்பதே இந்த வசனத்தின் ஆழ்ந்த சத்தியம். 'இயேசு கிறிஸ்து நிறைய பேருக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறாரே, அனைவரும் அவர் பின் செல்கிறார்களே' என்று யோவானிடம் சீஷர்கள் கேட்ட கேள்விக்கு மேற்கண்ட பதிலை யோவான்ஸ்நானகன் தருகிறார்.

தேவன் கொடுக்கச் சித்தமானதை யாரும் தடுக்க முடியாது, மேலும் தேவன் கொடுக்க விரும்பாததை யாரும் தந்துவிட முடியாது என்ற உண்மையை நாம் புரிந்து நம் வாழ்வில் அப்பியாசப்படுத்துவோம் என்றால் பொறாமை, ஊக்கமின்மை, உற்சாகமின்மை ஆகியவைகள் மறைந்துவிடும். மத்தேயு 6:32-ல் "இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்ற வசனத்தின்படி பரமபிதா நமக்கு வேண்டியவைகளை அறிந்திருக்கிறது மட்டுமல்ல அதனை தர சித்தமாயிருக்கிறார்.

## 215-வது செயற்குழு கூடுகை:

இந்த வருடத்தின் மூன்றாவது மற்றும் 215-வது செயற்குழு கூடுகை செப்டம்பர் மாதம் 23-ம் தேதி சென்னையில் நடைபெற்றது. ஊழியத்தின் பாதையில் அநேக தீர்மானங்கள் எடுக்க தேவன் உதவினது மட்டுமன்றி பொதுக்குழுவில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2022-23-ம் ஆண்டின் வரவு செலவு கணக்கு அறிக்கையினை பரிந்துரைக்க உதவினார்.

## பொதுக்குழு கூடுகை 2023:

2023-ம் ஆண்டுக்கான பொதுக்குழு கூடுகை செப்டம்பர் மாதம் 24-ம் தேதி சென்னையில் நடக்க தேவன் கிருபைசெய்தார். மொத்தமான 150 உறுப்பினர்களில் 109 பேர் கூடுகையில் கலந்து கொண்டது சிறப்பானக் காரியமாக இருந்தது. நாட்டின் சட்டத் திட்டங்களுக்கு உட்பட்டு இயக்கத்தின் வளர்ச்சிக்காக பல தீர்மானங்கள் எடுக்க தேவன் வழி நடத்தினார்.

### தேசிய ஊழியர் கூடுகை:

செப்டம்பர் 30-ம் தேதி முதல் அக்டோபர் 2-ம் தேதி வரை, பரமன்கேணியில் நடைபெற்ற தேசிய ஊழியர் கூடுகைக்காக தேவனுக்கும், நீங்கள் செய்த ஜெபங்களுக்காக உங்களுக்கும் நன்றி செலுத்துகிறேன். ஓய்வுபெற்ற ஊழியர்கள், ஊழியர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் என்று திரளான எண்ணிக்கையில் பங்குபெற்றனர். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஒரே குடும்பம் என்கிற உணர்வு இந்த கூடுகையின்போது அனைவராலும் அனுபவப்பூர்வமாக உணரப்பட்டது. மூத்த ஊழியர்கள் சிலர் தங்கள் உடல்நல குறைவினால் கூடுகையில் பங்குபெற இயலாமல் போன போதிலும் அவர்களின் பிள்ளைகள் தங்கள் குடும்பத்துடன் இதில் பங்கு பெற்றது இயக்கத்துடன் உள்ள இணைபிரியா உறவினை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லும் ஒரு நிகழ்வாக பார்க்கப்பட்டது. இந்தக்கூடுகை அழகாக, வெற்றிகரமாக நடைபெற காரணமாயிருந்த ஒருங்கிணைப்பு குழுவிற்கும், ஆழ்ந்த அர்ப்பணிப்போடு உழைத்த அநேக துணைக்குழுக்களுக்கும் என் நன்றி உரித்தாகுக.

### டெக்கான் பிராந்திய விஜயம்:

டெக்கான் பிராந்தியத்தில் தேவ ராஜ்ய கட்டுமானப் பணியிலுள்ள நமது ஊழியர்களை அவர்கள் பணித்தளங்களில் அவர் தம் வீடுகளில் பணித்தள பொறுப்பாளர்களோடுச் சென்று சந்திக்க தேவன் உதவினார். பணித்தளங்களிலே தேவன் செய்துவருகிற காரியங்களைக் கேட்டு, பார்த்து, அறிந்து உற்சாகமடைய இந்த சந்திப்பு மிகுந்த பிரயோஜனமுள்ளதாகவும் ஆசீர்வாதமான தாகவும் இருந்தது. சில விசுவாசிகளைச் சந்தித்து அவர்தம் வாழ்வில் தேவன் நிகழ்த்திய அற்புதங்களை கேட்டறிந்து மெய் சிலிர்த்தேன்.

### ஜம்மு பிராந்திய விஜயம்:

அக்டோபர் இரண்டாம் வாரம் ஜம்மு பிராந்தியத்தில் விசுவாசிகளின் கூடுகை ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றிருந்தேன். நமது விசுவாச குடும்பங்களில் தேவன் நடத்திய அற்புதங்களைச் சாட்சியாகச் சொல்லக் கேட்டு தேவனை மகிமைப்படுத்தினேன்.

### பஞ்சாப் விஜயம்:

பஞ்சாப் பிராந்திய புத்லாடா பணித்தளத்தின் விசுவாசிகளின் மாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காகவும், அக்.16-ம் தேதி காய் ஆலயப் பிரதிஷ்டை வைபவத்தில் பங்குபெறவும் ஜம்முவிலிருந்து பணித்தள தலைவர்களோடு பஞ்சாப் மற்றும் ஹரியானா விரைந்தேன். ஆலய நிர்வாகக் குழுவினால் மாநாடு மிகச் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. விசுவாசிகளின் ஜீவனுள்ள ஆராதனை மிகவும் சவாலாக இருந்தது. காக்கி ஆலய திறப்புவிழா பிரமாண்டமாக ஆலய குழுவினரால் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து புத்லாடா ஊழியர்களைச் சந்தித்துப் பேச தேவன் வழி நடத்தினார். அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ளவும், ஆக்கப்பூர்வமாகச் சிந்திக்கவும் சமயத்தை உபயோகப்படுத்தினோம்.

### *நவம்பர் மாதம் நடக்கவிருக்கிற நிகழ்ச்சிகளுக்காக ஜெபிக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.*

நமது இயக்கத்தின் தரிசனம் மற்றும் செயல் ஆரம்பிக்கப்பட்ட பெரியமலை வளாகத்தில் அனைத்து டிவிசனல் செயலர்களுடன் இரண்டு நாட்கள் உபவாசம் மற்றும் இரண்டு நாட்கள் திட்டமிடல் நவம்பர்

மாதம் 3-6-ம் தேதி வரை பெரியமலை வளாகத்தில் நடக்கவிருக்கிறது. பாதுகாப்பான பயணம் மற்றும் தேவனின் ஆசீர்வாதம் கூடுகையில் வெளிப்பட ஜெபிப்போம்.

## பாவ்ரி புதிய ஏற்பாடு அர்ப்பணிப்பு:

தேவனுக்கு சித்தமானால் 'பாவ்ரி மொழியில் புதிய ஏற்பாடு அர்ப்பணிப்பு' பாவ்ரா விசுவாசிகளின் மாநாட்டில் நவம்பர் 15-ம் தேதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து சுவிசேஷகர் சகோ. C.P.S. ராபின்சன் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார். இந்த இனிய நேரத்தில் பாவ்ரா மக்களுக்காகத் தன் வாழ்வின் பெரும்பாகத்தைக் கழித்த காலஞ்சென்ற அருட்திரு. இம்மானுவேல் இறைப்பிச்சை அவர்களை நினைவு கூருகிறோம். பாவ்ரி மொழியில் புதிய ஏற்பாட்டின் பெரும் பகுதியினை மொழிபெயர்த் திருந்த ஊழியர் இறைவனிடத்தில் சேர்ந்த பிறகு அவர் மனைவி திருமதி. ஜேன் அமுதா இம்மானுவேல் மீதி பாகத்தையும் மொழிபெயர்த்து உள்ளார்கள். சகோ. இம்மானுவேல் அவர்களின் ஊழியத் திற்கான அங்கீகாரம் வெகுமதி பரலோகத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் என்று விசுவாசிக்கிறோம். அவர்கள் மனைவிக்காக, 3 பிள்ளைகளுக்காகவும் ஜெபிப்போம்.

## வடகிழக்கு இந்திய பயணம்:

தேவனுக்கு சித்தமானால் வடகிழக்கு மாகாணமான நாகாலாந்திலுள்ள 'ஜெமி பாப்திஸ்ட் அசோசியேசன்' அமைப்பினரோடு 'திமாபூர்' என்கிற ஊரில் ஒரு 'புரிந்துணர்வு ஒப்பந்தம்' நவம்பர் மாதம் மூன்றாம் வாரம் போடப்பட உள்ளது. பிரயாணப் பாதுகாப்பு மற்றும் செயல்பாடுகளின் மூலம் பலன்கிடைக்க ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## செயற்குழுக் கூடுகை:

தேவனுக்கு சித்தமானால் வரும் நவம்பர் 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் 216-வது செயற்குழுக் கூடுகை கேரளாவின் ஆலப்புழா ஊரில் வைத்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தேவ ஆசீர்வாதத்திற்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

## ஜார்க்கண்ட் விஜயம்:

தேவனுக்கு சித்தமானால் நவம்பர் மாதம் கடைசி வாரத்திலிருந்து டிசம்பர் வரை ஜார்க்கண்ட் மற்றும் வட இந்திய பகுதி களில் பல நிகழ்ச்சிகளில் பங்குபெற செல்ல இருக்கிறேன். பிரயாணப் பாதுகாப்புக்காகவும் உடல் நலத்திற் காகவும் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

இதனை நான் எழுதிக்கொண்டிருக்கும் வேளையில் சுவிசேஷத்தின் நிமித்தம் கைது செய்யப்பட்டு உத்தரப்பிரதேச மாநிலத்தில் மட்டி ஊரின் சிறைக் கதவுகளுக்கு பின்னே அடைக்கப் பட்டிருக்கும் நமது மிஷனரி திரு. ஜங்கலூன் தௌதங்க்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்க உங்களைப் பட்சமாய் கேட்டுக் கொள்ளுகிறேன். உங்களுடைய தியாகமான காணிக்கைகளுக்காக, அர்ப்பணிப்புள்ள ஜெபங்களுக்காக நன்றி. இன்னும் அதிக தைரியத்துடன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நமது ஊழியர்களுக்கு தேவன் பெலன் தர ஜெபித்துக்கொள்ளுங்கள்.

தேவ ஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



**அருட்திரு. S. ஜாண் பெர்லின்**




# கிறிஸ்துவை அறியாதோருக்கு அறிவிக்க தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்

இந்த நிதி ஆண்டில் “நான் உன்னைத் தெரிந்துகொண்டேன்'' என்ற தலைப்பில் நாம் தியானித்து வருகிறோம். வேதத்திலுள்ள அநேக பாத்திரங்களை தேவன் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தெரிந்துகொண்டார். மோசேயை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலரை விடுவிக்கத் தெரிந்துகொண்டார். சாலொமோன் ராஜாவை எருசலேமில் ஆலயம் கட்டத் தெரிந்துகொண்டார். நம் அனைவரையும் ஆண்டவர் அவருடைய பிள்ளைகளாகத் தெரிந்துகொண்டார் (யோ.1:12) எவ்வளவு பெரிய பாக்கியம் இது.

அப்.9:15-ல் ஆண்டவர் பவுலை, கிறிஸ்துவை அறியாத புறஜாதிகளுக்கும் (தேசத்தாருக்கும்) ராஜாக்களுக்கும் சுவிசேஷம் சொல்ல தெரிந்துகொண்டார். இதை உணர்ந்த பவுல் அதை முழுமையாக நிறைவேற்றினார். 3 முறை கடல் மார்க்கமாக சுவிசேஷப் பயணம் செய்து அநேக நாடுகளுக்கு சுவிசேஷம் அறிவித்து, புறஜாதிகள் மத்தியில் சபைகளை உருவாக்கினார். அது என் மேல் விழுந்த கடமை என குறிப்பிடுகிறார். ‘சுவிசேஷம் சொல்லாவிட்டால் எனக்கு ஐயோ’ என கூறுகிறார். சுவிசேஷம் சொல்ல அவர் வெட்கப்படவில்லை. அதற்காக தன் மேன்மையைக் குப்பையாக எண்ணினார்.

நாமும் பவுலைப் போல இயேசுவை அறியாத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கும் கருவிகளாக வாழ வேண்டும் அதற்காகவே தேவன் நம்மை தெரிந்தெடுத்திருக்கிறார்.

## A பவுலின் முழுமையான அர்ப்பணிப்பு:

பவுல் இஸ்ரவேல் வம்சத்தில் பென்யமீன் கோத்திரத்தில் பிறந்தவர். சவுல் ராஜா பென்யமீன் கோத்திரத்தில் பிறந்தபடியால், இவருக்கு இந்த பெயர் வைத்திருக்கலாம். இவர் ரோமனாக இருந்தபடியால் “பவுல்” என்னும் லத்தீன் பெயருடையவரானார். அவர் ரோமர் குடியுரிமைப் பெற்றிருந்ததால், அவர் குடும்பம் உயர்ந்த நிலையில் இருந்திருக்க வேண்டும். எருசலேமிலே கனம்பெற்ற நியாயசாஸ்திரி கமாலியேலிடம் போதனை கற்ற கல்வியாளர்.

யூத மார்க்கத்தில் வைராக்கியமுள்ள பவுல், இயேசுவை ‘மேசியா’ என அறியாததால், கிறிஸ்தவர்களை துன்புறுத்தினார். தமஸ்குவுக்கு சீஷர்களைச் சிறைப்பிடிக்கச் செல்லும் வழியில் இயேசுவைச் சந்திக்கிறான். “சவுலே, நீ ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய்?” என்ற இயேசுவின் சத்தத்தைக் கேட்டு “ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர். நீர் என்ன சொன்னாலும் செய்கிறேன்” என்று தன்னை முழுமையாக அர்ப்பணித்தான். கொள்ளைக்காரியான பூலான் தேவி, கொலை கொள்ளைக் குற்றங்களுக்காக 1980-களில் சிறையில் அடைக்கப்பட்டார். உத்தரப்பிரதேசத்தின் முன்னாள் முதல்வர் திரு. முலாயம்சிங் யாதவ் அவர்கள், அவருக்கு மன்னிப்பளித்து எம்.பி. பதவியைக் கொடுத்தார். நிருபர்கள்

அவரிடம் பேட்டியின்போது திரு. முலாயம் சிங் செய்த உதவிக்கு நீங்கள் என்ன செய்வீர்கள்? எனக் கேட்டனர். அதற்கு அவர் 'அவர் என்ன சொன்னாலும் செய்ய என்னை முழுமையாக அர்ப்பணிக்கிறேன்' என்றார். நாமும் நம்மை ஆண்டவருக்கும், சுவிசேஷம் சொல்லவும் முழுமையாக அர்ப்பணிப்போம்.

## B பவுலின் உண்மை:

1 தீமோ.1:12-ல் பவுல் தன்னை 'ஆண்டவர் உண்மையுள்ளவன் என்று எண்ணி' ஊழியத்திற்கு ஏற்படுத்தியதாகக் குறிப்பிடுகிறார். பவுல் இயேசுவை சந்திக்கும் முன்பு யூத மார்க்கத்திற்கு உண்மையுள்ளவராக இருந்தார். நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றம் சாட்டப்படாதவராய் வாழ்ந்தார். அதனால்தான் ஆண்டவர் அவரை நம்பி புறஜாதிகளுக்கு அப்போஸ்தலனாக ஏற்படுத்தினார். தன் அழைப்பில் உண்மை யாயிருந்த பவுல், "குணப்பட்ட பின்பு தாமதமின்றி இயேசுவே தேவனுடைய கும ாரன் என்று பிரசங்கித்தார்." யூதருக்கும், கிரேக்கருக்கும், எல்லா புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்க தாம் கடனாளி என குறிப்பிடுகிறார். மற்றவர்களுடைய அஸ்திபாரத்தில் சுவிசேஷ ஊழியத்தை கட்டாமல், இயேசு நாமம் சொல்லபட்டிராத இடத்தில் சுவிசேஷம் அறிவிக்க நாடி, ஓடி உழைத்தார்.

அவர் தன்னைப் பற்றிப் பிரசங்கிக்காமல், இயேசுவே 'கர்த்தர்' என்று பிரசங்கிப்பதை தலையாகியக் கடமையாக எண்ணினார். தன் வாழ்நாள் முழுவதும் ஊழியத்தை உண்மையாய் செய்தார். அநேக பாடுகளை அனுபவித்தும் பின்வாங்காமல் ஊழியத்தை நிறைவேற்றினார்.

ஊழியத்தில் மட்டுமல்ல, தனிப்பட்ட வாழ்விலும் உண்மையாய் வாழ்ந்தார். பொருள் மீது ஆசைப் படவில்லை. "யாருடைய வெள்ளியையோ, பொன்னையோ, வஸ்திரத்தையோ இச்சிக்கவில்லை" என குறிப்பிடுகிறார். தன் தேவைகளுக்காகத் தன் கைகளினால் வேலை செய்து ஊழியம் செய்தார். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாவோடு கூட கூடாரம் செய்யும் வேலை செய்து, சுவிசேஷம் அறிவித்தார். தனக்காகக் காணிக்கைச் சேகரிக்கவில்லை; ஏழைகளுக்காகச் சேகரித்து அவர்களுக்கு உதவினார். அவருக்கு சொந்த வீடு இல்லை. வாடகை வீட்டில் வசித்து தேவப்பணி செய்தார். தேவனுக்கும், மனுஷருக்கும் முன்பாக எப்பொழுதும் குற்றமற்ற உத்தம மனசாட்சி உடையவராய் வாழ்ந்தார். நாமும் ஊழியத்திலும், தனிப்பட்ட வாழ்விலும் ஆண்டவருக்கு உண்மையாயிருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம்.

## C பவுலின் ஜெப வாழ்க்கை:

பவுல் ஒரு ஜெப வீரன். இயேசுவை அவன் சந்தித்தப்பின் யூதா வீட்டில் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தான். அதன் பின்பு சில காலங்கள் ஜெபத்தில் தரித்திருந்த தாகச் சொல்லப்படுகிறது. அவரது நிருபங்களை வாசிக்கும்போது, திருச்சபைகளுக்காக ஜெபம் செய்ததைக் காண முடிகிறது (ரோ.1:9, எபே.1:16, பிலி.1:11, கொலே.1:5, 1தெச.1:4). கலாத்திய சபை மக்கள் சத்தியத்தை விட்டு விலகியபோது அவர்களுக்காக கர்ப்பவேதனையோடு ஜெபிக்கிறான் (கலா.4:19).

அவர் மற்றவர்களுடன் சிறைச் சாலையிலும், ஆற்றங்கரை ஓரத்திலும், விசுவாசிகளோடும் ஜெபம் செய்ததை வேதத்தில் பார்க்க முடிகிறது. ரோமர் 10:1-ல், இஸ்ரவேலர் இரட்சிக்கப்பட

வேண்டும் என்று ஆத்தும பாரத்தோடு பவுல் விண்ணப்பம் பண்ணுகிறார்.

FMPB-ன் முன்னாள் பொது செயலர் மதிப்பிற்குரிய பேட்ரிக் ஜாஷ்வா அண்ணனுக்குத் தலைமை செயலகத்தில் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. அப்போது அநேகர் அண்ணனைப் பற்றிச் சாட்சிசொன்னார்கள். பேட்ரிக் அண்ணனின் மகன் சாட்சி சொன்னார். "அப்பா இறுதி நாட்களில் சர்க்கரை வியாதியால் அதிகக் கஷ்டப்பட்டார்கள். ஆனாலும் உபவாசம் செய்து ஜெபிப்பார்கள். டாக்டர்கள் சொல்லியும் கேட்கவில்லை. நானும், அப்பா உபவாசம் வேண்டாம் என்றேன். அவர்கள் சொன்ன பதில் என் தேச ஜனம் அழிகிறார்கள் எப்படி உபவாசித்து ஜெபிக்காமல் இருக்க முடியும்" என்றார்கள். நாமும் இயேசுவை அறியாமல் அழியும் மக்களுக்காகவும், மிஷனரி பணிக்காகவும் ஜெபிப்போம்.

## ஜெபம்:

ஆண்டவரே! பவுலைப்போல இயேசுவை அறியாத மக்களுக்கு சுவிசேஷம் சொல்ல எங்களை 100% அர்ப்பணிக்கிறோம். உமக்கு முன்பாக உண்மையாய் வாழ்ந்து, உழைக்க ஒப்புக் கொடுக்கிறோம். அழியும் ஆத்துமாக்களுக்காக தனி ஜெபம் செய்யவும், குழுவாகக் கூடி ஜெபிக்கவும் அர்ப்பணிக்கிறோம். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

**- திரு. யோகராஜ் சாமுவேல்**
கௌரவ விரிவுப்பணி செயலர்
- அம்பத்தூர்

# பணித்தள விஜயம்

## பெரியமலை பணித்தளம், தர்மபுரி மாவட்டம்.



மத்திய நெல்லை மற்றும் தூத்துக்குடி மாவட்டம் முதலூர் மற்றும் சாத்தான்குளம் பகுதியிலிருந்து 20 பேர் கொண்டக் குழுவாக கடந்த 25.08.2023 முதல் 27.08.2023 வரை 3 நாட்கள் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முதல் பணித்தளமாகிய பெரியமலை (பெட்டமுகிலாளம்) பகுதிக்குச் சென்று அந்தப் பணித்தளத்தைப் பார்வையிட்டோம். 26.08.2023 வெள்ளி அன்று மாலை மாரண்டகள்ளி ஆலயத்தில் கூடுகை நடத்தினோம். ஆலய வரலாறு, அனுபவச் சாட்சியினைக் கேட்டு மகிழ்ந்தோம். பணித்தளத்தில் எவ்வாறு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்றும் முதல் மிஷனரி குடும்பம் பற்றியும் மூத்த மிஷனரி திரு. S. ஜெபராஜ் (தேன்கனிகோட்டை) அவர்கள் நேரில் காணொளி காட்சி மூலம் விளக்கினார்கள். 26.08.2023 சனிக்கிழமை மாலை மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிக்குச் சென்று அங்கு நடைபெறும் ஊழியங்களைப் பார்வையிட்டுத் திரும்பினோம். 27.08.2023 ஞாயிறன்று நாங்கள் இரு குழுக்களாகப் பிரிந்து, கிரணபள்ளி ஆலயத்திற்கு ஒரு குழுவும், மணியம்பாடி ஆலயத்திற்கு ஒரு குழுவும் சென்று ஆலய ஆராதனையில் பாடல்களைப் பாடி, சாட்சிகளை அறிவித்தும், கர்த்தருடைய செய்தியும் கொடுத்து வந்தோம். இந்த மூன்று நாட்களும் எங்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருந்தது. 28.08.2023 திங்கள் காலை நெல்லை திரும்பினோம்.

- கௌரவ விரிவுப்பணி செயலர், நெல்லை வடக்கு - 2



# தேசிய மிஷனரி கூடுகை 2023

சகோதரரே, சென்னைக்குப் போக பயணச்சீட்டு பதிவு பண்ணிட்டீங்களா? ஓ! நாங்க தலைமைச் செயலகத்திலிருந்து தகவல் வந்த உடனே பயணச்சீட்டு எடுத்துட்டோம். கடைசி வரை ஏன் தாமதம் பண்ண வேண்டும்? ஒருவேளை பயணச்சீட்டு கிடைக்காமல் போயிட்டால் சிரமம் தானே சகோதரா.



வட இந்திய மற்றும் தென் இந்தியாவின் தூரப் பகுதிகளில் தேவ இராஜ்யத்தைக் கட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் அநேகர் அவர்கள் கூடுகையின் போது உற்சாகத்தோடு பேசிக் கொண்டனர். ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் தேசிய மிஷனரி கூடுகைப் பற்றி மூன்று மாதங்களுக்கு முன்னரே ஒவ்வொரு ஊழியர்களுக்கும் அவர்கள் பிராந்திய அலுவலகம் மூலமாகத் தகவல் சொல்லப்பட்டது. ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு என்கிற ஆசியாவின் மாபெரும் இயக்கத்தின் குடும்பக் கூடுகை அல்லவா! நம் ஊழியர்கள் தாங்கள் பணி செய்யும் இனக்குழுக்களின் கலாச்சாரம், பணி முறைமைகள், நடனம், குறு நாடகங்கள், பாடல்கள் போன்றவைகளைப் பயிற்சி செய்ய ஆரம்பித்து விட்டனர்.

எல்லாரும் எதிர்பார்த்திருந்த செப்டம்பர் மாதம் 30-ம் தேதி நெருங்கினது. தங்கள் தங்கள் பணித்தளங்களிலிருந்து புகைவண்டியில் குதூகலத்துடன் நீண்ட பயணத்தைத் தொடங்கினர் ஊழியர்கள்.



'சென்னைக்கு நான் புதுசு, சென்னையிலிருந்து கூட்டம் நடக்கும் இடத்திற்குப் போக ஏதாவது ஒழுங்கு செய்திருப்பார்களா?' வடஇந்திய ஊழியர் தன் கவலையை வெளிப்படுத்தின உடனே 'கவலை வேண்டாம் நண்பரே புகைவண்டி நிலையத்திலிருந்து கூட்டம் நடக்குமிடத்திற்கு வாகன வசதி செய்யப்பட்டிருக்கிறது. தகவல் தந்தக் கடிதத்தை நீங்க படிக்கவில்லையா? இது பிராந்திய செயலர் ஒருவரின் பதில்.

சென்னை மத்திய ரயில் நிலையம், எழும்பூர் ரயில் நிலையம் செங்கல்பட்டு பேருந்து நிலையம் ஆகிய நிறுத்தங்களில் குடும்பம் குடும்பமாக வந்திறங்கிய ஊழியர்களின் நீண்ட

நேரப் பயணக்களைப்பு, அங்கே ஊழியர்களை வரவேற்று வாகனங்களில் அனுப்பிவிட காத்துக்கொண்டிருந்த திரு. ரஞ்சித் மற்றும் திரு. சேவியர் அண்ணன்கள் குழுவினரின் அன்பான உபசரிப்பினால் காணாமல் போனது. ஜெபம் மற்றும் பாடல்களுடன் வாகனங்கள் மகாபலிபுரம் அடுத்த பரமன்கேணியிலுள்ள வளாகத்திற்குள் ஒன்றன்பின் ஒன்றாக நுழைந்தன.



'வளாகத்தினுள் நுழைந்த உடனே ஊழியர்களின் விபரங்களைப் பதிவுசெய்து, சூட்கேஸ், துண்டு, போர்வை போன்றவைகளைத் தந்து அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற அறைகளுக்கு அனுப்புகிற பாங்கைக் கண்ட, முதன்முறையாக கூடுகைக்கு வந்திருந்த புதிய ஊழியர்கள், சிறப்புவாய்ந்ததாகச் சிலாகித்தார்கள்.' சகோதரர்கள் எடிசன், ரூபர்ட்சன் குழு மற்றும் நமது இயக்கப் பொருளாளர் நெல்சன் அண்ணன் குழு இவைகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர்.

ஊழியர்கள் தங்கள் பயணக்களைப்புத் தீர சற்றே ஓய்வு எடுத்துவிட்டு சாயங்காலம் நடக்கவிருந்த தொடக்கவிழாவிற்குத் தயாராயினர். டோனாவூரில் பயின்று கொண்டிருக்கும் ஊழியர்களின் பிள்ளைகள் தனி பேருந்தில் அழைத்து வரப்பட்டிருந்தனர். பிள்ளைகளைக் கண்டதும் ஊழியர்களுக்கும் பெற்றோரைக் கண்டதும் பிள்ளைகளுக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி.

மாலைநேரத்து தேநீரோடு தொடக்கவிழா தொடங்கினது. நமது இயக்கத் தலைவர் திரு. ரெஜினால்டு அண்ணன் அவர்கள் ரிபன் வெட்டி ஊழியர்களின் வெற்றிப் பவனியைத் தொடங்கி வைக்க, அதனைத் தொடர்ந்து பணித்தளச் செயலர் தன் மனைவியுடன் தேசியக்கொடியினையும் நமது இயக்க இலச்சினை பொருந்தியக் கொடியினையும் ஏந்தி முன்செல்ல பின்னே ஒவ்வொரு மண்டல ஊழியர் குழுக்கள் தாங்கள் பணிசெய்கின்ற வெவ்வேறு இன மக்களின் தோற்றத்தில் மற்றும் மாநிலங்களை வெளிக்காட்டும் வண்ணம் உடைகள் அணிந்து, நடனம் ஆடி, பாடலுடன், பவனியாகச் சென்றனர். யுத்தம் செய்வோம் வாரீர் கிறிஸ்து வீரரே என்ற பாடலுடன் அனைத்து ஊழியர்களும் கூட்ட அரங்கினுள் போடப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்தனர். இயக்கத்தின் தலைவர், உபதலைவர், பொருளாளர், பொதுச்செயலர் ஆகியோர் இயக்கத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளை வாசிக்க மற்றவர்கள் பின்சொல்லி தங்களை இயக்கத்தின் கொள்கைகளோடு உறுதிப்படுத்திக் கொண்டனர். அதன்பின் அனைவரும் பின் பற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றிய அறிவிப்போடு உபதலைவர் ஜெபித்து கூட்டம் முடிவுக்கு வந்தது. இரவு அருமையான உணவிற்குப் பின் மறுபடியும் கூட்ட அரங்கில் ஜெபத்துக்கு அனைவரும் கூடி வரவே தென் இந்திய முன்னேற்றப் பணி செயலர் அவர்களை ஜெபத்திலே நடத்தினார்.



முதலாவது நாள் சூரியனின் இளங்கதிர்கள் வெளிப்படும் காலைவேளையில் கூட்ட அரங்கு ஊழியர்களால் நிரம்பி வழிந்தது. பாடல்கள் பண்மொழியில் இருக்க அதை ரசித்தவாறே


தியானத்திற்குத் தயாராயினர். முனைவர் ஜெமிலா கோஷி காலை தியானத்தை முன் எடுத்தார். காலை சிற்றுண்டிக்குப் பிறகு ஊழியர்கள் எட்டுக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஊழியத்தைக் குறித்து ஆலோசிக்க, தீர்மானங்கள் எடுக்க அனுப்பப்பட்டனர். ''மனநலத்தைப்'' பற்றி முனைவர் ஜெமிலா கோஷியும், ''உண்மைத்துவத்தைப்'' பற்றி முனைவர் ஆனந்த் சாமுவேலும், "ஆவிக்குரிய போராட்டம்" பற்றி சகோ. சந்தீப் டேனியலும், "பெற்றோர் மற்றும் குழந்தைகள்" பற்றி திரு. சி.பி. சாமுவேலும் முதலாவது அமர்வில் எடுத்துரைக்க, இரண்டாவது அமர்வில் திரு. சுதன் டேவிட் மற்றும் சகோதரி மேகா அவர்கள் அநேக செயல்முறைகள் மூலம் தேவனின் திட்டத்தைத் தெளிவாக எடுத்துரைத்தனர்.



சந்தியா நேரத்தில் திரு சி.பி. சாமுவேல் மூலமாக தேவனின் வார்த்தை வல்லமையாக வெளிப்பட்டது. இரவு உணவுக்குப் பின்னர் கலாச்சார நிகழ்ச்சிகள் கலைக்கட்டின. ஒவ்வொரு பிராந்தியமாக தங்கள் திறமைகளை நடனங்கள், பாடல்கள், குறு நாடகங்கள் மூலமாக வெளிப்படுத்த, ரசித்தவாறே அமர்ந்திருந்தனர். ஊழியர்களின் இளம் வாலிப மற்றும் வாலிபப் பிள்ளைகளுக்கு திரு. ஜாண் லாங்வே அவர்களின் தலைமையிலுள்ள நவோதயா குழுவினரும், சிறுவர் பிரிவின் திரு. ஜாண்சன் அவர்களின் குழுவினருமாக தனித்தனியே கூடுகை நடத்தி, பிள்ளைகளை உற்சாகப்படுத்தி தேவ வார்த்தைக்குள் வழிநடத்தினர்.

இரண்டாவது நாள் ஞாயிறு அதிகாலை 6.30 மணிக்கே தமிழ், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி பாடல்கள் பாடி கூடுகை ஆரம்பிக்கப்பட்டது. திரு. சி.பி. சாமுவேல் அவர்கள் தேவ வார்த்தையைப் பகிர்ந்துக்கொள்ள திருவிருந்து ஆராதனை நமது அருட்பொழிவு பெற்ற சகோதரர்களால் செவ்வனே நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருமதி. பெரில் யோகராஜ் அவர்கள் விருந்தினர்களை கௌரவப்படுத்த சகோ. சுதன் மற்றும் சகோதரி மேகா அவர்கள் குழு நடவடிக்கைகளுக்கு நேராக நடத்தினர். அதனைத் தொடர்ந்து சகோ. பால் தினகரன் அவர்கள் பரலோகத்தில் ஊழியர்களின் முக்கியத்துவம் என்ற செய்தி அளித்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்.

தேநீர் இடைவேளைக்குப் பின்னர் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து வெவ்வேறு இடங்களில் தங்களின் செயல்பாடுகள் மற்றும் கற்றலைத் தொடர்ந்தனர். மாலை நேரத்தில் திரு. ரோஜி தாமஸ் அவர்கள் 'யோபுவின் நீண்ட பொறுமை' பற்றி வேதாகமத்திலிருந்து எடுத்துரைத்தது, பணித்தளங்களில் சந்திக்கிறக் காரியங்களை நினைவுப்படுத்தும் வண்ணம் இருந்தது. இரவின் நேரம் பல்வேறு இனமக்களின் கலாச்சார பிரதிபலிப்புகளோடு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.




மூன்றாவது கூடுகையின் இறுதி நாளான்று காலை தியானம் திரு. ரோஜி தாமஸ் அவர்களாலும் அதனைத்

தொடர்ந்து சகோ. சுதன் மற்றும் சகோதரி மேகா அவர்களின் குழு நடவடிக்கைகள் மூலம் நமது ஊழியர்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர். நமது பணித்தளத்தின் முன்னாள் செயலர் முனைவர் எபிநேசர் சுந்தரராஜ் வேதாகமத்திலிருந்து கேள்வி பதில்கள் மூலம் அநேகக் காரியங்களை அறிந்துகொள்ளும் ஆர்வத்தை உண்டாக்கினார். பின்னர் குஜராத்தில் தலைமைச் செயலராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. ஜெகதீஸ் பாண்டியன் IAS அவர்கள் பணித்தளத்தில் 'ஊழியர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் மற்றும் அதன் தீர்வுகள்' பற்றி அருமையாக எடுத்துரைத்தார். சிறிய ஓய்வுக்குப் பின்னர் திரு. ஆனந்த் சாமுவேல் அவர்கள் 'நிச்சயமற்ற இக்காலச் சூழ்நிலைகளில் ஊழியம்' செய்வதைப் பற்றி விளக்கமாகக் கூறி தனது உரையைச் சிறப்பித்தார். சகோ. சுதன் மற்றும் சகோதரி மேகா குழு விளையாட்டுகளில் ஊழியர்களை ஈடுபடுத்தினர்.

அந்திம வேளை சூரியனும் நீலக்கடலும் சங்கமிக்கும் நேரத்தில் சந்தியாக் கூடுகை கடற்கரை மணற்பரப்பில் நடைபெற்றது. பாடல்கள், நடனங்கள், குழு நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டு மற்றும் வேதாகம வினா விடைகளுக்கான பரிசுகள் அறிவிக்கப்பட்டன. வெற்றியாளர்களை கரம் தட்டி உற்சாகப்படுத்தினர் மற்ற ஊழியர்கள். இறுதியாக நமது இயக்கத்தின் பொது செயலர் அருட்திரு. ஜாண் பெர்லின் அவர்கள் கொடுத்த தீர்க்கமான தேவசெய்தி ஊழியர்களை மறு அர்ப்பணிப்புள்ளதாகவும், தேவராஜ்யக் கட்டுமானப்பணியில் தங்களை முழு மூச்சில் ஈடுபடுத்திக் கொள்ளவும் உந்தி தள்ளியது. இரவு உணவிற்குப் பின்னர் மீண்டும் கடற்கரையில் ஊழியர்கள் கூடி ஆடல் பாடல் நிகழ்ச்சிகளை நடத்தினர்.

## கூடுகையின் அனுபவங்கள்:

*இது என் வாழ்வில் ஒரு அற்புதமான நிகழ்வு! எப்போதும் மறக்கமுடியாதது!! சிலாகித்தார் முதன் முதலாக இப்படிப்பட்ட ஊழியர்கள் கூடுகையில் பங்குபெற்ற புதிய இளம் ஊழியர் ஒருவர்.*

*வட இந்திய உணவுகளையே சாப்பிட்டு பழக்கப்பட்டவர்கள் நாங்கள். இங்கு எப்படி இருக்குமோ என்ற சந்தேகத்தில் வந்திருந்த எங்களை எல்லாவித உணவு வகைகளையும் பரிமாறி உபசரிப்பில் அசத்திவிட்டனர். இது இன்னுமோர் ஊழியரின் வெளிப்பாடு*

*மூத்த ஊழியர்கள் தங்கும் இடம் மற்றும் உணவு போன்றவற்றில் தனி கவனம் செலுத்தப்பட்டது பாராட்டுக்குரியது இது மூத்த ஊழியரின் பாராட்டுப் பத்திரம்.*

இப்படி அநேகரின் பாராட்டுதல்களையும் வாழ்த்துதல்களையும் பெற்ற கூடுகை இனிதே நிறைவேறியது. நமது தலைமைச் செயலக செயலர் 'நன்றி' கூறவே பொதுச்செயலர் ஜெபம் ஏறெடுத்து கூட்டம் சுபமாக முடிந்தது. கூடுகை முடிந்த அடுத்த நாள் ஊழியர்கள் மகாபலிபுரம் போன்ற இடங்களைச் சுற்றிப்பாத்துவிட்டு தங்கள் பணித்தளத்தை நோக்கிய நீண்ட பயணத்தை மேற்கொண்டனர்.

உணவு சமைத்தல், பரிமாறுதல் போன்ற காரியங்களை சென்னை வாலிபப் பிரிவு பொறுப்பாளர் சகோ. இம்மானுவேல், சகோ. ஆனந்த் மற்றும் சகோ. ரசல் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர். ட்ரான்ஸ் வோல்ர்ட் ரேடியோ ஸ்தாபனத்தின் இந்த பரமன்கேணி இடத்திற்குப் பொறுப்பான திரு. எபன் வின்செண்ட் அவர்களுக்கும், போக்குவரத்து, சமையல், இட வசதி மற்றும் ஊழியர்களின் மருத்துவ வசதி போன்ற எல்லா காரியங்களையும் செய்து கூடுகையை சிறப்பாக்கிய அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

– **திரு. ஜாண் லாங்வே** – கூடுகைத் தொகுப்பாளர், **அருட்திரு. டி. ஆபிரகாம்** – மிஷனரி.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**திருமதி. ஜெமிமா கெர்சோம்**
31.10.1948 - 03.10.2023

என்னுடன் செலவழிக்க உனக்கு சிறிது நேரம் கிடைக்குமா சகோதரி? ஏன்? என்ன விஷயம்?

உன்னோடிருந்து எல்லாக் காரியங்களிலும் உதவிசெய்ய வல்லவரான ஒருவரை உனக்கு அறிமுகம் செய்ய விரும்புகிறேன்.

இந்த உரையாடல் கோயம்புத்தூரில் ஒரு கல்லூரி யில் பயின்றுக்கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணுடன், கர்த்தரின் இராஜ்யத்திற்கு ஆத்து மாக்களைச் சம்பாதிக்கத்தன் இளம் வயதிலிருந்தே வைராக்கியங்கொண்டிருந்த சகோதரி. ஜெமிமா அவர்களால் சொல்லப்பட்டது. இயேசுவை அறிமுகம் செய்து வைத்ததின் காரணமாக ஒரு ஆத்துமா அழிவிலிருந்து மீட்கப்பட்டது. ஆமாம் வேற்று மத நம்பிக்கையைக் கொண்டிருந்த அந்த பெண் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

கோயம்புத்தூர் நகரிலுள்ள கல்லூரி ஒன்றில் படித்துக்கொண்டிருந்தபோதே ஆத்தும ஆதாயம் செய்ய ஆரம்பித்துவிட்ட சகோதரி. ஜெமிமா பெற்றோருக்கு 31.10.1948 அன்று பிறந்தார். பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்திருந்தாலும் அநேகரைப்போல இலக்கின்றி வாழ்ந்துக் கொண்டிருந்தார். தன்னுடைய 15-வது வயதில் பத்தாவது படித்துக்கொண்டிருந்தபோது கிறிஸ்தவ வாலிபர் இயக்கத்தின் மூலம் நடத்தப்பட்டக் கூட்டத்தில் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டது மட்டுமின்றி ஆத்துமாக் களைக் கர்த்தருக்கென ஆதாயப்படுத்தும் பணியே பிரதானம் என்று முடிவு செய்து வாழ ஆரம்பித்தார். பள்ளிப்படிப்பை முடித்து, கல்லூரி யில் சேர்ந்தவர் தன் இளங்கலைப் படிப்பை முடிக்கும் முன்பே ஜெபக்குழுக்களை ஏற்படுத்தி சிலரை இரட்சிப்பின் வழியில் நடத்தினார்.

கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் வேறு பணிகளுக்குச் செல்லும் வாய்ப்புகள் வந்த போதும் அவர் தேவ ஊழியத்தை தெரிந்துகொண்டு கோயம்புத்தூர் திருமண்டலம் சார்பாக சேலம் பகுதியில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு. கெர்சோம் அவர்களை 1977-ம் ஆண்டு திருமணம் செய்து ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள ஹனுமன் கார் என்கிற பணித்தளத்திற்குக் குடும்பமாகச் சென்றார்.

அன்று ஆரம்பித்த அவர்தம் தேவ ஊழியத்தை 2007-ம் ஆண்டு அவர் தன் கணவருடன் பணியிலிருந்து ஓய்வுபெறும் வரை தொய்வில் லாமல் செய்தார். தன் கணவருடன் ஊழியத்திற்குச் செல்வது மட்டுமன்றி, தனிப்பட்ட முறையில் பெண்கள் கூட்டம் நடத்துவது, ஆலோசனைகள் கூறுவது என்று ஊழியத்திற்குப் பக்கபலமாக இருந்தார். ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து சென்னை, கான்பூர் போன்ற இடங்களுக்குப் பணி மாறுதல் செய்யப்பட்டு கணவரோடுச் சென்று ஊழியத்தைச் சிறப்பாகச் செய்துவந்தார்.

சகோதரி. ஜெமிமா சிரித்த முகத்துடன் பெண்களுக்கு ஆலோசனைச் சொல்லி ஜெபிக்கும் பழக்கம் பாராட்டத்தக்கது. இறுதியாக, தன் 76-வது வயதைத் தொட சில நாட்களே இருக்கும் போது தேசிய ஊழியர்கள் கூடுகையில் கலந்துகொள்ள ஆர்வத்துடன் வந்தவர் தனக்குத் தெரிந்த தன்னுடன் பணியாற்றிய ஊழியர்கள் மட்டுமன்றி அநேக புதிய ஊழியர்களையும் சந்தித்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டு ஜெபித்தார். இறுதிவரை கர்த்தரின் ஊழியத்தை தொய்வில்லாமல் செய்துவந்தவர், ஊழியர்கள் கூடுகை முடிந்து 03.10.2023 அன்று ஒரு காரில் மகாபலிபுரத்திலிருந்து பெங்களூருக்கு தன் கணவர், மகன்கள் குடும்பத்தோடு பயணப்பட்டவர், வழியில் சாலை விபத்தில் சிக்கி தன் இன்னுயிரை இழந்து தேவ இராஜ்யத்துக்குள் பிரவேசித்தார்.

அவர் விட்டுச்சென்றுள்ள கணவர் திரு. கெர்சோம் மற்றும் மகன்கள் பெஷலீல் ராஜா செல்வின், இன்பகுமார் ஜோஷ்வா, அவர்களின் மனைவிகள் மற்றும் பேரக்குழந்தைகளின் ஆறுதலுக்காக ஜெபிப்போம். சகோதரியின் அழகான வாழ்க்கைக்காக கர்த்தரைத் துதிப்போம்.

**- அருட்திரு. டி. ஆபிரகாம்**



# தேசிய குழந்தைகள் தினம்

நவம்பர் 14 தேசிய குழந்தைகள் தினமாகவும் நவம்பர் 20-ம் தேதி உலகளாவிய குழந்தைகள் தினமாகவும் கொண்டாடப்படுகிறது. நாம் அனைவரும் அறிந்தபடி, குழந்தைகள் எதிர்காலம் மற்றும் அவர்கள் நம் சமூகத்தின் திறவுகோல்கள். இந்த நாட்கள் குழந்தைகளின் நலனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள மற்றும் உலகெங்கிலும் உள்ள குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாக்க அரசாங்கமும் தனிநபர்களும் ஒன்றிணைந்து செயல்பட ஊக்குவிக்கின்றன.

**சாதனைகள்:** கடந்த இரண்டு தசாப்தங்களாக இந்தியாவின் வளர்ச்சி உலகளாவிய மனித வளர்ச்சிக்கு அதிக பங்களிப்பை அளித்துள்ளது. இந்தியாவில் தீவிர வறுமை 21% ஆக குறைக்கப்பட்டுள்ளது. குழந்தை இறப்பு பாதியாக உள்ளது; மேலும் இரண்டு மில்லியன் குறைவான குழந்தைகள் பள்ளி படிப்பை முடிக்கிறார்கள். இவை குறிப்பிடத்தக்க சாதனைகள் என்றாலும் இந்தியாவின் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு அவர்கள் வாழும் சூழல் இன்னும் சவாலாகவே உள்ளது.

**சவால்கள்:**

1. சத்தான உணவைப் பெற – இந்தியாவில் ஊட்டச்சத்து குறைபாடு அதிகமாக இருப்பதால் 38.4 சதவீத குழந்தைகள் வளர்ச்சி குன்றியவர்களாக இருக்கின்றனர். இளம் பருவப் பெண்கள் குறிப்பாக மோசமான ஊட்டச்சத்து நிலையால் பாதிக்கப்படுகின்றனர்.

2. குழந்தைகளின் முழு வளர்ச்சிக்காக – உலகிலேயே 253 மில்லியன் இளம் பருவத்தினரைக் கொண்ட இந்தியா, மேலும் ஒவ்வொரு ஐந்தாவது நபர் 10-19 வயதுக்கு இடைப்பட்டவர்கள். இந்த பெரிய எண்ணிக்கையிலான இளம் பருவத்தினர் பாதுகாப்பாகவும், ஆரோக்கியமாகவும், படித்தவர்களாகவும், தகவல் மற்றும் வாழ்க்கைத் திறன்களைக் கண்டவர்களாகவும், இருந்தால், நாட்டின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு ஆதரவாக இருந்தால், இந்தியா சமூக ரீதியாவும், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேறும்.

3. குழந்தைகளின் பாதுகாப்பிற்காக 60-80 சதவீத பெண்கள் பொது இடங்களில் பாலியல் துன்புறுத்தல் / வன்முறையை எதிர்கொள்ளுகிறார்கள்.

4. குழந்தைத் திருமணங்கள் ஒழிக்கப்பட – குழந்தைத் திருமணங்கள் அதிகம் நடைபெறும் எட்டு தெற்காசிய நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தில் இருப்பதால், இளவயது திருமணம் மற்றும் குழந்தைப்பேறு அவர்களின் ஆற்றல்மிக்க ஆரோக்கியமான வாழ்க்கை வாழ்வதற்கான திறனை பாதிக்கிறது, இது அடுத்த தலைமுறையை பாதிக்கிறது.

5. நமது FMPB-ன் விடுதி மற்றும் பள்ளிகளில் உள்ள குழந்தைகள் உடல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் வளர; நமது FMPB-ன் குழந்தைகள் பிரிவின் மூலம் குழந்தைகளைச் சந்தித்து அவர்களை கிறிஸ்துவை நோக்கி அழைத்துச் செல்லும் குழுவினரையும் நம் ஜெபங்களில் நினைவு கூருவோம்

**– திருமதி. மேகலா பிரபாகர்**



# பணித்தள விஜயம்

## ஜம்மு & காஷ்மீர்

கடந்த செப்டம்பர் மாதம் 2023 தென்காசி விரிவுப்பணி மாவட்டப் பகுதியிலிருந்து நாங்கள் செப்.14 முதல் 17 வரையுள்ள நாட்களில் 14 பேர் கொண்டக் குழுவாக ஜம்மு & காஷ்மீர் பணித்தளங்களைப் பார்வையிடவும் அங்குள்ள மிஷனரிகள் குடும்பங்களுடன் ஐக்கியம் கொள்ளவும் கர்த்தர் கிருபை செய்தார். மேலும் பசிகாளன், ஆர்.எஸ்.புரா, நரோத், சாம்பா, உதம்பூர் ஆகிய பணித்தளங்களை நேரில் சென்று பார்க்கவும் பணித்தள இரவு கூடுகைகளிலும் விசுவாசிகளோடு பங்குபெறவும் கர்த்தர் கிருபை செய்தார். பல தடைகள், கஷ்டங்கள் மத்தியிலும் மிஷனரிகள் கடினமானப் பகுதிகளில் ஊழியம் செய்து வருகிறதை குறித்துப் பாரப்பட்டு ஜெபிக்க உந்தப்பட்டோம். தொடர்ந்து இப்பணித்தள ஊழியர்களுக்காக, ஊழியத்திற்காக ஜெபிக்கவும், கொடுக்கவும் முன் வந்துள்ளனர். பணித்தள புதிய விசுவாசிகளுக்கு வேதாகமத் தேவைகளை அறிந்து, தேவையோடுள்ள விடுதிச் சிறுவர்களை ஆதரிக்கவும் முன்வந்துள்ளனர். இப்பணித்தள விஜயத்தை அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைத்துக்கொடுத்த தேவனைத் துதிக்கிறோம்.

– விரிவுப்பணி செயலர் – தென்காசி பிராந்தியம்

# மிஷனரிப் பிரதிஷ்டை



கர்த்தரின் பெரிதானக் கிருபையால் 29.07.2023 அன்று ECI உயிர்த்தெழுந்த நாதர் ஆலயத்தில் நடந்த அறைகூவல் கூடுகையில் சபைப் போதகர் அருட்திரு. J. ஜோயல் அவர்களால் கீழ்க் கண்ட மிஷனரிகள் தேவநாம மகிமைக்காகப் பிரதிஷ்டைச் செய்யப்பட்டார்கள்.

| வ.எண். | மிஷனரிகள் | தாங்கும் குடும்பங்கள் |
|---|---|---|
| 1. | திரு. ஷெய்க் சுபானி | திரு. கணேஷ் குமார் |
| 2. | திருமதி. நிரோலா டிகல் | திருமதி. ஜெஸி ஷீலா |
| 3. | செல்வி. மனிஷா லக்ரா | திரு. ரொனால்டு மோனி |

மேற்கண்ட மிஷனரிகளுக்காகவும் மற்றும் தாங்கும் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

கௌரவ விரிவுப்பணி செயலர், சூளைமேடுப் பணிமாவட்டம், சென்னை.



# மிஷனரிப் பிரதிஷ்டை

30.07.2023 அன்று திரு. ஆபிரகாம் அவர்களைப் பிரதிஷ்டைச் செய்த பவர் பிரேயர் அசெம்பிளி சபை ஜெபித்து முதலாவது மிஷனரியைத் தாங்குகிறது. அதைத் தொடர்ந்து 06.10.2023 அன்று இரண்டாவதாக, திரு. ஆல்பர்ட் சந்தோஷ்ராஜ் மிஷனரி அவர்களை அருட்திரு. பால்ராஜ் அவர்கள், அருட்திரு. சாமுவேல் சுப்பிரமணியம் அவர்கள், அருட்திரு. ஜாண் சாமுவேல் மற்றும் போதக பிதாக்கள் முன்னிலையில் பிரதிஷ்டைச் செய்ய தேவன் கிருபை செய்தார். இவர்களை பவர் பிரேயர் அசெம்பிளி சபையின் போதகர் அருட்திரு. சாமுவேல் அமிர்தராஜ் அவர்கள் குடும்பமாக ஜெபித்துத் தாங்குகிறார்கள். FMPB செய்கின்ற ஊழியத்தால் மிஷனரி தரிசனம் பெற்று, பவர் பிரேயர் அசெம்பிளி சபை வருகின்ற ஜனவரி மாதம் 3-வது மிஷனரியை ஜெபித்துத் தாங்க முன்வந்துள்ளது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

– கௌரவ முன்னேற்றப்பணி செயலாளர், உடுமலைப்பேட்டை




## காலச் சுவடுகள்

# ஹென்றி நாட்

## தென் பசிபிக் தீவு மிஷனரி

(1774 - 1844)



1774-ல் ஹென்றி நாட் இங்கிலாந்திலுள்ள புரூம்ஸ்குரோவில் பிறந்தார். புதிதாக உதித்திருந்த லண்டன் மிஷனரி சங்கம் அனுப்பிய முதல் மிஷனரிகளில் இவரும் வில்லியம்கேரியும் இடம் பெற்றனர். இச்சங்கம் உருவாகும் முன்பாக பின்தங்கிய நாடுகளுக்கு இங்கிலாந்து மிஷனரிகளை அனுப்பவில்லை. ஆனால் இச்சங்கம் தோன்றியபின் பலர் மிஷனரிகளாக இணைந்தனர். செப்.1796-ல் 22 வயதான நாட் மற்ற மிஷனரிகளோடுகூட தென் பசிபிக் தீவுகளுக்கு நற்செய்தியைச் சுமந்து செல்லும்படியாக கப்பல் பயணத்தை மேற்கொண்டார். 1797 மார்ச் 5-ல் தாஹித்தியை அடைந்தனர். இன்று தாஹித்தி என்றாலே அழகிய கடற்கரைகளும் கொள்ளா இயற்கைக் காட்சிகளும் கொண்ட விடுமுறை மற்றும் சுற்றுலாத் தளம் என்று தான் நினைக்கிறோம். ஆனால் மக்களின் கேடுகெட்ட வாழ்க்கைத் தரம் அந்த அழகை அழுக்காக்கிற்று. அறியாமை மற்றும் மூடநம்பிக்கையாகிய வேர்களிலிருந்து முளைத்த வினோதமான தீபச் சடங்குகளில் மக்கள் ஊறியிருந்தனர். அத்தீவிலேயே பொமாரே-1 அவர்களது அரசனாயிருந்தார். மிஷனரிகள் தீவை அடைந்தவுடன் அரசரை சந்தித்தனர். அவரும் விருப்பமாக அவர்களை வரவேற்றார். அவருக்கு மிஷனரிகளின் நோக்கங்கள் வாஞ்சைகளில் கரிசனையில்லை. மாறாக, அவர்கள் கொண்டு வந்திருந்த மேற்கத்திய கருவிகள் மற்றும் பொருட்களிலிலேயே அவரது கவனம் இருந்தது. பொமாரே அவர்களுக்குப் பெரியதொரு வீட்டைக் கொடுத்திருந்தார். மிஷனரிகளும் ஆர்வத்துடன் மிஷனரிப் பணியைத் துவங்கினர்.

இரட்சிக்கப்படாத உள்ளூர் மொழி பெயர்ப்பாளர் ஒருவரது உதவியுடன் ஞாயிறு 1 மார்ச் 1797-ல் நாட் தனது முதல் கிறிஸ்தவ ஆராதனையை நடத்தினார். பொமாரே மிஷனரிகளுடன் கருவிகள், பொருட்கள் போன்ற வைகளையும் வற்புறுத்தி வாங்கினார். தீவுவாசிகளும் மிஷனரிகளிடம் பரிசுப் பொருட்களைக் கட்டாயப்படுத்தி வாங்கினதால் பொருள் தட்டுப்பாடு ஆனது. கொடுக்க ஒன்றுமில்லாதபோது இருந்த சிலவற்றையும் திருடிச் சென்றனர். திருட்டு ஒரு சாதாரணப்பழக்கமாகவும் அவர்களது மதத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் இருந்தது. 'திருடரின் காவலன்' என்ற ஒரு தெய்வத்தையும் அதற்கு பலி செலுத்தி வழிபட்டு வந்தனர். தாஹித்தி மக்களும் என்ன தான் சுவிசேஷத்திற்கு

செவிசாய்த்தாலும், அவர்களது மனதும் இதயமும் இருளினால் ஆக்கிரமிக்கப்பட்டு உலகப் பொருட்களால் மயக்கப்பட்டிருந்தது. இவர்கள் யுத்தங்களுக்கும் கொலை களுக்கும் பெயர்போன கொடூரர்கள்.

யுத்தம் சாதாரணமாகவும், சமாதானம் அபூர்வமாகவும் எண்ணப்பட்டன. பழிக்குப் பழியாக ஒருவரைக் கொன்று, அவ்வுடலை வெயிலில் காயபோட்டு நடுவில் பெரியதொரு ஓட்டையிட்டு அதை ஆடை போல் கைகள் முன்னாலும் கால்கள் பின்னாலும் தொங்கும்படியாக அணிந்துச் செல்வர். நரபலி முக்கியமாகச் சர்வ சாதாரணமாகப் பிறக்கும் பிள்ளைகளில் மூன்றில் இரு பங்கு பெற்றோரால் அல்லது குழந்தைக் கொலையாளிகள் என்பவர்களால் பிறப்பிலேயே கொல்லப்பட்டனர். சில சமயம் பிள்ளைகளைப் பலியாக கடலிலோ அல்லது கொதிக்கும் எரிமலையிலோ எறிவர். செய்த குற்றங்களுக்காகவும் பலி செலுத்துவர். குடிப்பழக்கம் அவர்களை பேய்த்தனமாய் நடந்துக் கொள்ளச் செய்தது. பிறருக்கு பாரமில்லாமல் இருக்க நோய்வாய்ப்பட்ட முதியவர்களை உயிரோடு புதைத்து விடுவர். இம்மக்கள் கற்பனைச் செய்யக்கூடாத அளவிற்கு மோசமானவர்களாய் இருந்தனர். இன்னும் மோசம் என்னவென்றால், சில மாதங்களில் மிஷனரிகளின் எண்ணிக்கைக் குறையத் துவங்கியது. பலர் ஊழியத்திலிருந்து விலகி துறைமுக வணிகத்தில் பொருளீட்டினர். ஒரு மிஷனரி கொல்லப்பட்டார்.

வேலை கடினமாயிருந்ததாலும், பாடுகளின் வலிகளைக் காணக்கூடாதிருந்ததாலும் பலர் உற்சாகம் இழந்தனர். ஹென்றி நாட்டோ விடாப்பிடியாய்த் தொடர்ந்தார். 10 ஆகஸ்ட் 1801-ல் உள்ளூர் மொழியைக் கற்று மக்களுக்கு அவர்களது மொழியிலேயே பிரசங்கித்த முதல் மிஷனரியானார். 7 ஆண்டுகளில் இருமுறை மட்டுமே நாட்-க்கு உதவிப்பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. அதிலும் ஒருமுறை கடலால் சேதமடைந்தது. 1803-ல் பொமாரே இரட்சிக்கப்படாமல் மரித்தார். அவரது மகன் பொமாரே-2 அரசரானார். பொமாரே 1 அரசனாயிருந்தபோது 2000 பேரை பலியிட்டதாகக் கணக்கிடப்பட்டது. மேலும் 6 மிஷனரிகள் 1805-ல் தாஹித்தியை விட்டுச் செல்ல தீர்மானித்தனர். 1808-ல் மிஷனரிகள் வாழ்ந்த வீடு அழிக்கப்பட்டு ஏறத்தாழ எல்லாமே திருடு போயின. எஞ்சியவர்கள் அடுத்த ஆண்டே அந்த இடத்தை காலிச்செய்தனர். 1810-ல் ஹென்றி நாட் மட்டுமே தாஹித்திய தீவில் மிஞ்சி இருந்தவர். நாட் வேதாகமத்தை தாஹித்திய மொழியில் அச்சடித்து மக்கள் வாசிக்க விநியோகித்தார். நாட் நற்செய்தியை பொமாரே 2-விற்கு விளக்க அதிக நேரம் செலவழித்ததின் விளைவாக 1813-ல் ஆலயம் கட்டப்பட்டது. 1815-ல் பொமாரே எல்லா விக்கிரகக் கோவில்களையும் அகற்றிவிட்டார். தீவுமுழுவதும் நடந்து வந்த அருவருப்புகள் அறவே அகன்றுப்போயின. திரும்பிச் சென்ற மிஷனரிகள் பலர் மறுபடியும் தீவிற்கு வந்துசேர்ந்தனர். 1819 மே 11 ராயல் மிஷன் ஆலயம் பிரதிஷ்டைச் செய்யப்பட்டது. மறுநாள் மக்களின் நடத்தையை நிர்வகிக்கும்படியான கிறிஸ்தவச் சட்டங்களையும் அறிவித்தார். அது ஹென்றி நாட்டினால் எழுதப்பட்டு பின்னாட்களில் மற்ற தென் பசிபிக் தீவுகளிலும் பயன்படுத்தப்பட்டது.

மே16, 1819-ல் ஹென்றி முதல் ஞானஸ்நானத்தை பொமாரே-2க்குக் கொடுத்தார். தொடர்ந்து 5 ஆண்டுகளில் நூற்றுக்கணக்கானோர் திருமுழுக்குப் பெற்று பலர் மிஷனரிகளாக கிறிஸ்துவின் அன்பின் நற்செய்தியை அண்டை தீவுகளுக்குச் சுமந்துச் சென்றனர். ஹென்றி நாட் 47 ஆண்டுகள் தாஹித்தி தீவில் பணிச் செய்த பின் மே 2-ம் தேதி 1844-ல் ஆண்டவர் அவரைத் தமது நித்திய வீட்டிற்கு அழைத்துக் கொண்டார்.

# மிஷனரிப் பிரதிஷ்டை ஆராதனைகள்



விருதுநகர் விரிவுப்பணி மாவட்டம் சார்பில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு அஸோம் மிஷனரி திருமதி.மார்கிரெட் சிங், திரு. பிரவீன் தாஸ், தமிழ்நாடு மிஷனரி **திருமதி. அர்ச்சனா மோகன்**, குஜராத் மிஷனரி **திரு. கெநோஸ் ஸ்டான்லி இன்பராஜ், திரு.அகிலேஷ் குமார்** 09.07.2023 அன்று நடைப்பெற்ற மிஷனரி தரிசன குடும்பக்கூடுகையில் விருதுநகர் **CSI தூய யோவான் ஆலயம்** விருதுநகர் **அருட்திரு. அன்பின்ராஜன் ஓய்வு** அவர்கள் அருட்திரு. D. மணிமாறன், நமது மிஷனரி சேர்ந்து மிஷனரிப் பிரதிஷ்டை ஆராதனையை நடத்த கர்ததர் கிருபை செய்தார். மிஷனரிகளின் ஆதரவாளர்கள் **திருமதி. எபன் மனோகரன்** (விருதுநகர் ஜெபக்குழு) **Dr. ரஞ்சித்சுகுமார் S.** (என்.ஜி.ஓ காலனி ஜெபக்குழு), **திருமதி. மலர் ஜோதி** (சூலக்கரை ஜெபக்குழு), திருமதி ஹன்னா ஜெபராணி (என்.ஜீ.ஓ. காலணி ஜெபக்குழு), மாடர்ன்நகர் குடும்பம் (மாடர்ன்நகர் ஜெபக்குழு) நமது கௌரவ விரிவுப்பணி செயலர்கள், அனைத்து ஜெபக்குழ அங்கத்தினர்கள் ஆதரவாளர்கள், சபையாக சேர்ந்து ஜெபித்து தேவனுடைய கிருபையால் ஆராதனை நிறைவு பெற்றது.



விருதுநகர் விரிவுப்பணி மாவட்டம் தம்மநாயக்கன்பட்டி சார்பில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு குஜராத் மிஷனரி **திரு. P. வினு** ஜார்க்கண்ட் மிஷனரி **திரு. வேதமாணிக்கம் அப்பாத்துரை** மிஷனரி **திருமதி. ஜெப தெபராள்**, பஞ்சாப் மிஷனரி **திருமதி. ஷகினா எஸ்.** ஆகியோர் 20.08.2023 அன்று தம்ம நாயக்கன்பட்டி CSI தூய பவுல் ஆலயத்தில் வைத்து நடைப்பெற்ற மிஷனரி தரிசன குடும்ப கூடுகையில் தம்மநாயக்கன்பட்டி குருசேகர தலைவர் **அருட்திரு. T. ஞான செல்வன்** அவர்கள் அருட்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ், நமது மிஷனரி சேர்ந்து மிஷனரிப் பிரதிஷ்டை ஆராதனையை நடத்த கர்த்தர் கிருபை செய்தார். மிஷனரிகளின் ஆதரவாளர்கள் **திரு. தங்கராஜ் R.** தம்மநாயக்கன்பட்டி PG, **திரு. சாமுவேல் பெர்சயால் S.** தம்மநாயக்கன்பட்டி (SCANPG) **திருமதி. அமிர்தகனி** குடும்பம் தம்மநாயக்கன்பட்டி (SCANPG) **திரு. ஜான்சன் காலேப்** தம்மநாயக்கன்பட்டி (PG), அனைத்து ஜெபக்குழு அங்கத்தினர்கள் மற்றும் ஆதரவாளர்களுக்காக தேவனைத் துதிக்கிறோம்.

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வியாபாரிகள் கூடுகை-2023

**நாள்:** 19 நவம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை

**நேரம்:** மாலை 5 மணி முதல் 8 மணி வரை

**இடம்:** இம்மானுவேல் ஆலய சமுதாயக் கூடம், அஸ்தம்பட்டி, சேலம் -7.

*சிறுவர்களுக்கான சிறப்புக் கூட்டம் தனியாக நடைபெறும்.*

**1 நவம்பர்**
**புதன்**
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கய்தியன்கின் வெய்ஃபெய்
திரு. தாங்லால் ஸௌ
திருமதி. மேரி முர்மு தினேஷ்

# ஜம்மு

## சாம்பா:

### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** பட்யாரி மற்றும் பான்தி கிராமங்களில் நற்செய்திக்கு காணப்படும் நல்ல வரவேற்புக்காகவும், பட்யாரி கிராமத்தில் ஒருவர் இயேசுவே இரட்சகர் என்று அறிக்கைச் செய்ததற்காகவும், அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட பான்தி கிராமத்தின் ரேக்கா, சாக்துங்கி கிராம கவிதாவுக்காக; கிரமமாக நடைபெற்று வருகிற வேதாகம வகுப்புகளுக்காகவும் அதில் தொடர்ந்து கலந்து கொள்ளுகிற விசுவாசிகளுக்காகவும் துதிப்போம்.

**ஜெபிக்க:** சும்ப், கூட்டா, பொங்வால், சுங்வாலி கிராமங்களில் நற்செய்தி அறிவிக்க திறந்தவாசல் கிடைக்க; மஹேசா இனக்கூட்டம் நற்செய்திக்குச் செவிசாய்த்து இயேசுவை ஏற்றுக்கொள்ள; சப்கால் கிராம 15 வயது அஞ்சலா தன் பேசும் திறனைப் பெற ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## ராம்பூர்:

### தௌஜபாவ் குயிட்டே & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** இரண்டு பேர் தேவனின் அடியவராயினர். நிசா தன் தாயுடன் பேருந்தில் மலைப் பயணம் செய்து கொண்டிருந்த வேளையில், பெரிய விபத்திலிருந்து அவர்கள் தப்பினதற்காக; 14 புதிய தொடர்பாளர்கள் தேவனை அறியும்படி நமது கூட்டங்களுக்கு வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சகோதரி உஷா இழந்தத் தன் கண்பார்வையைத் திரும்பப் பெற; பிரியா, நிசா மற்றும் அனிதாவுக்கு சுக பிரசவத்தை தேவன் கட்டளையிட; விசுவாசப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆலயத்திற்குத் தவறாமல் அழைத்துவரவும், பிள்ளைகள் தீய நண்பர்களின் சகவாசத்தை விட்டொழிக்கவும் ஜெபிப்போம்.

## ஆனி:

### ஹின் சாவ்ம் & சிங் கோயி கிம்

**துதிக்க:** ஜெபத்தின் விளைவாக தீபாவுக்கு மாநில தலைமைச் செயலகத்தில் வேலை கிடைத்துள்ளதற்காக; மேட்ராஸின் மகளுக்கு ராம்பூர் மருத்துவக் கல்லூரியில் செவிலியர் படிக்க இடம் கிடைத்துள்ளதற்காக; சக்திதேவியின் வீட்டில் நடத்தப்பட்ட எழுப்புதல் கூட்டத்தில் அநேக புதிய மக்களும், பின்வாங்கிப் போன விசுவாசிகளும் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பகத்ராம் மற்றும் தேக்ரி தேவியின் குடும்பங்களில் நிலவும் குழப்பங்கள் முடிவுக்கு வர; பான்கு தேவி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுபட; திட்டமிடப்பட்டிருக்கின்ற வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள், பின்தொடர்பணி ஆகியவைச் சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

## 2 நவம்பர்
வியாழன்

### ரிகாங்பியோ:
**சங்கர் ஏ. & ரூத் மேரி**

**துதிக்க:** 6 நபர்கள் இயேசுவின் விசுவாசிகளானதற்காக; சபை மூப்பர்களின் ஆத்தும ஆதாய பயிற்சி சிறப்பாக நடைபெற்றதற்காக; 6 கிராமங்களில் 845 நபர்களுக்கு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முராங் கிராமத்தில் உண்டான எதிர்ப்புக்குப்பின் ஆராதனைக்கு வரப் பயப்படும் விசுவாசிகளின் பயம் நீங்கி விசுவாசத்தில் பெலப்பட; மாவட்ட அளவில் விளையாட்டுப்போட்டிகளுக்கு தயாராகி இருக்கின்ற நமது விசுவாசிகளின் பிள்ளைகள் வெற்றிபெற ஜெபிப்போம்.

## பஞ்சாப்

### பட்டாலா:
**வால்வி நேதாஜி டாடு & கல்பனா**

**துதிக்க:** புதிதாக 2 பேர் தேவ அன்பின் ஐக்கியத்திற்குள் வந்துள்ளனர். இயேசு திரைப்படம், சத்சங் கூட்டங்கள் மூலமாக 3 புதிய கிராமங்களில் சுமார் 600 பேருக்கு நற்செய்தி எடுத்துரைக்கப்பட்டது. மேஜர் சிங் புதிதாக ஆலயம் வர ஆரம்பித்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நான்கு வயது சிறுவன் வருண் கட்டுக்கடங்காத சர்க்கரை நோயினால் அவதியுறுகிறான். 22 வயது இளம் பெண் சோனியா தீய ஆவியின் பிடியில் சிக்கி தவிக்கிறாள். புதிய தொடர்பாளர் நரேஷ் தேவனின் விசுவாசத்தில் அதிகமாய் வளர ஜெபிப்போம்.

### லேஹ்ரகாகா:
**ஐசக் ஆபேல் & அன்னா ரோஸ்லின்**

**துதிக்க:** சுனம் கிராம சபை மூப்பர் சங்கரின் மனைவியின் பிரசவ நேரத்தில் குழந்தை இருக்கும் நிலை சரியில்லை என்று கூறி மருத்துவர் அறுவை சிகிச்சைக்குப் பரிந்துரைத்தார். சங்கர் மற்றும் விசுவாசிகள் விசுவாசத்தோடு ஜெபித்தபோது, குழந்தை எந்தப் பிரச்சினையுமின்றி சுகமாகப் பிறந்து தேவ நாமம் மகிமைப்பட்டதற்காக; காண்ட்வான், ஜகத்பூரா, ஜக்கார் மற்றும் கடியால் கிராமங்களில் நடத்தப்பட்ட சத்சங் கூட்டங்கள் மூலம் இந்த கிராமங்களிலுள்ள புதிய தொடர்பாளர்கள் கிடைத்துள்ளமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்கள் விசுவாசத்திற்குள் வளர; ஜவான்டே மற்றும் கால்பஞ்சாரா கிராமங்களில் சத்சங் கூட்டங்கள் நடத்த நிலவும் எதிர்ப்புகள் நீங்க; காண்ட்வான், ஜகத்பூரா, ஜக்கார் மற்றும் கடியால் கிராமங்களில் நடத்தப்பட்ட சத்சங் கூட்டங்கள் மூலம் இந்த கிராமங்களின் புதிய தொடர்பாளர்கள் விசுவாசத்திற்குள் வளர ஜெபிப்போம்.

## 3 நவம்பர் வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மார்கரெட் ஜோதிமணி ஆசீர்

திருமதி. ரேச்சல் ரமேஷ்பாய்

### மான்சா:

**தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்**

**துதிக்க:** 3 நபர்கள் இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். 6 கிராமங்களை புதிதாக சந்தித்து 1300 நற்செய்தி பிரதிகள் கொடுக்க தேவன் உதவினார். போஹா ஆலய நிர்வாக வசதிக்காக, ஒரு குழு ஏற்படுத்தப்பட்டு அதில் 5 பேர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மான்சா மற்றும் போஹா ஆலயங்களில் நடைபெற்று வந்த உள்புற வேலைகள் சபை விசுவாசிகளின் ஒத்துழைப்புடன் விரைவில் நடைபெற தேவன் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜர்துல்வாடா, ஜான்டா, நகோமி மற்றும் பிர்துவாலா கிராமங்களில் நடத்தவிருக்கும் வெளிப்புற சுவிசேஷக் கூட்டங்களில் தேவ ஆவியானவர் ஊற்றப்பட்டு நல்ல விளைவுகள் ஏற்பட; லல்டிசிங், அமோல்சிங், சுக்வீந்தர்சிங், ஜஸ்ப்ரீத்சிங், மஞ்சித்சிங் ஆகியோருக்கு இரட்சிக்கப்பட்ட மணப் பெண்கள் கிடைக்க ஜெபிப்போம்.

# ஹரியானா

### ஹரியானா பிராந்தியம்:

**பி.ஜி. கிறிஸ்டோபர் & மேபல்**

**துதிக்க:** பெஹேவா பணித்தளத்திலுள்ள 8 வயது சிறுமி எலிசா பேசவும், நடக்கவும் முடியாமல் இருந்தாள். நமது ஊழியரை அழைத்து ஜெபம் செய்ய வேண்டினார்கள். ஜெபத்தின் மூலம் தற்போது பேச, நடக்க முடிவதற்காக; கணவனால் கைவிடப்பட்டு இரு பிள்ளைகளை வைத்துக்கொண்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த சுர்ஜித் கௌருக்கு இருந்த சிறு நிலத்தை விற்று கடனை அடைக்க கணவன் தடையாக இருந்தார். இயேசு கிறிஸ்துவின் அடைக்கலத்துக்குள் வந்த பிறகு அந்த நிலத்தை நல்ல விலைக்கு விற்று கடனை அடைத்து, வாழ்வாதாரத்திற்கு ஒரு வழியை தேவன் திறந்ததற்காக; மத்தியப் பிரதேசத்தின் ரத்தியா பணித்தளத்தி லுள்ள கேரா கிராமத்தைச் சேர்ந்த ஹர்பனேஷ் சிறுநீரகங்கள் பழுதடைந்து மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைசெய்ய பரிந்துரைத்த நேரத்தில் ஹர்பனேஷ் விசுவாசத்தில் விடாப்பிடியாக உபவாச ஜெபம் செய்ய ஆரம்பித்தார். அடுத்த முறை மருத்துவ மனைக்குச் சென்றபோது சிறுநீரகம் நன்றாக இயங்குகின்றது என மருத்துவர்கள் சான்று அளித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிக்கா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு நிலவுகின்ற எதிர்ப்புகள் மறைய; முதுகு தண்டுவடப் பிரச்சினையிலிருந்து நீலாவும், நுரையீரல் பிரச்சினையிலிருந்து குர்மீத்சிங், கமலேஷும் குணமடைய; ஞான்சந்தின் வயிற்றில் காணப்படுகின்ற கட்டி மறைந்துபோகவும், மங்கட் ராமின் மூன்று பிள்ளைகளுக்கும் காணப்படுகிற சருமப் பிரச்சினையிலிருந்து விடுதலை கிடைக்கவும் ஜெபிப்போம்.

4 நவம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. முத்தா ரத்னகுமாரி சதீஷ்

### தோஷம்: ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்

**துதிக்க:** பயங்கரமான மஞ்சள் காய்ச்சலிலிருந்து விசுவாசி அஜெய் குணமடைந்ததற்காக; பாலவாஸ் கிராமத்தின் பவுலா சகோதரி வீட்டு வேலைகள் செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வரும் சூழ்நிலையில், வேலை செய்யும் வீடுகளில் இயேசுவைப் பற்றி அறிவித்து ஜெபித்து வருவதற்காக; சஹவான் கிராமத்தின் பால்வான் விபத்தில் சிக்கி கால் உடைந்து, சிகிச்சைக்குப்பின் குணமடைந்து ஆலயம் வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்வாங்கி குரு வணக்கம் செய்வதுமல்லாமல் ஆலயம் செல்லும் தங்கள் குடும்பத்தையும் தொந்தரவு செய்யும் விகாஷ் மற்றும் ராம்பால் மனம்மாற; டிங்க் கிராமத்திலிருந்து சாத்தானின் தொந்தரவு நீங்க ஜெபம் செய்ய பாலாவாஸ் கிராமத்துக்கு தன் உறவினர் வீட்டுக்கு வந்திருக்கும் சுமித்ரா குணமடைய; சாஹவான் கிராம விசுவாசி பால்வான் குடும்பத்தின் அதீத வறுமை நீங்க ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்

### நானக்மட்டா:

**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** நமது விசுவாசி கோஷ்மீருக்கு, ஊரின் முக்கிய வீதியில் ஒரு தையல் கடை திறக்க தேவன் உதவினார். நுசார் கிராமத்தில் விசுவாசி ஒல்வினின் தந்தை தூங்கிக் கொண்டிருந்தபோது ஒரு நல்ல பாம்பு அவர் மேல் விழுந்து ஊர்ந்துச் சென்றாலும் அது தீண்டிவிடாதபடி தேவன் அதன் வாயைக் கட்டினதற்காக; 2 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டு, சுமார் 80 நபர்களுக்கு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தந்தையை இழந்து தவிக்கும் விசுவாசி வீரு குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; சிறுநீரக நரம்பு பிரச்சினையினால் அவதியுறுகிற 14 வயது சிறுவன் ரவீந்தர் குணமடைய; வீட்டில் திருட்டு நடந்து தங்க நகையினை பறிக் கொடுத்திருக்கும் தியோரி கிராமத்தின் சத்வீர்சிங் இழந்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

### தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** இளம்பெண் அணு 17 வயது பூர்த்தியாகியும் திருமணத்திற்கு தகுதியாகாமல் இருந்தார். அவரது பெற்றோர்கள் ஆலயம் வந்து கண்ணீரோடு ஜெபித்ததினால் தற்போது பூப்பெய்தியுள்ளார். தைனம்பர் கிராமத்தில் மாயா மற்றும் கீதா நீண்ட வருடங்களுக்குப் பிறகு ஜெபத்தினால் மகப்பேறு அடைந்துள்ளனர். திருமதி. ராஜி ராணியைக் கருநாகம் சீறிக்கொண்டு தீண்டவந்தபோது, ஜெபத்தினால் அவர் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நீரஜ்குமார் குடும்பம் தங்களை இயேசுவின் மந்தையில் சேர்த்துக் கொள்ளத் தடையாக இருக்கும் யாவும் அகல; டெங்கு காய்ச்சலினால் நீண்ட நாட்களாக சிகிச்சைப்பெற்று வருகின்ற சிறுவன் அமர்ஜீத் விரைவில் சுகம் பெற; வணிகவியல் மற்றும் கணினி பயிற்சி முடித்துள்ள இளம் பெண் பிரியாவிற்கு நல்லதொரு வேலை கிடைக்க ஜெபிப்போம்.

**5 நவம்பர்**
**ஞாயிறு**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
செல்வி. ஜெயஸ்ரீ

## ராஜஸ்தான்

### காஜுவாலா: வி. குமார் & பெட்ரிசியா தமிழ்ச்செல்வி

**துதிக்க:** 9 நபர்கள் தேவ அன்பின் ஐக்கியத்திற்குள் வந்துள்ளனர். 11-வது படித்துக்கொண்டிருக்கும் சிறுமி கௌர்ப்ரீத் வாரந்தோறும் சிறுவர்களுக்கு வேதாகம வகுப்புகள் நடத்தி வருகிறார். 16 வயது சிறுமி மணிஷா மாலைக் கண் நோயால் பாதிக்கப்பட்டு, கண்கள் இரத்தச் சிவப்பாக மாறிய நிலையில் விசுவாசத்துடன் ஜெபித்து பூரண சுகத்தைப் பெற்றுக் கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய கிராமங்களில் வரும் மாதம் நடக்கவிருக்கிற சுவிசேஷம் பறைசாற்றும் நிகழ்ச்சி தடையில்லாமல் சிறப்பாக நடந்தேற; நமது விசுவாசிகளின் நிலங்களில் பயிரிடப்பட்டுள்ளப் பயிறு வகைகள் நல்ல மகசூலைத் தர ஜெபிப்போம்.

### அல்வர் விடுதி: பங்காரு நாயுடு கர்ரி & ஈமண்டி அனுராதா

**துதிக்க:** 3 நபர்கள் தேவனை ஏற்றுக் கொண்டனர். 3 வருடங்களாக நிறைய செலவு செய்து மருத்துவம் பார்த்தும் குறையாத தோல் வியாதி தொடர்ந்து ஜெபித்ததினால் ரித்தினாவுக்கு தோல் வியாதி குறைந்து விட்டது. நீண்ட நாட்களாக திருமணத்திற்காக ஜெபித்து வந்த சகுந்தலாவிற்கு திருமணம் விசுவாசியுடன் நிச்சயிக்கப்பட்டுள்ளது. விக்ரம் மற்றும் கமலாபாயின் குடும்பங்களில் காணப் பட்ட சமாதான குறைச்சல் மற்றும் பிரிவினை உபவாச ஜெபத்தினால் முடிவுக்கு வந்து, கோபித்துக் கொண்டு சென்ற மருமகள் வீட்டுக்குத் திரும்பி வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராம்கார், கோவிந்த்கார், சிக்னி மற்றும் நவோ காவ் பகுதிகளில் எதிர்ப்பு களின் மத்தியிலும் விசுவாசிகள் உறுதி யாக நிற்க; நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ள துலேடா கிராமத்தில் தேவன் கிரியைச் செய்ய; சாம்ரோடா மற்றும் சண்டிகா கிராமங்களில் ஆலயம் கட்ட நிலம் கிடைக்க; திட்டமிடப்பட்டிருக்கிற வெளிப்புற சுவிசேஷக் கூட்டங்கள், வாலிபர் கூட்டங்கள் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

### கேர்வாடா:

### போயா தேவுபாய் & ஜாமுபேன்

**துதிக்க:** 8 நபர்கள் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தை உறுதிச் செய்தனர். நாம் ஒழுங்கு செய்தி ருந்த ஆவிக்குரியக் கூட்டத்தில் கலந்து கொள்ள 27 புதிய நபர்கள் வந்திருந்த மைக்காக; அபிலாஷா, மீனா மற்றும் மனிஷா பாம்புக் கடியிலிருந்து குண மடைந்ததற்காக; சுதேச ஊழியர் மனைவி சுரதாபேன் நீண்ட நாட்கள் தூக்கமின்மை யால் அவதியுற்று உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் ஆலயம் வந்து ஜெபித்து நல்ல தூக்கத்தைப் பெற்றதற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** காஜூரி கிராமத்தில் ஆராதனை புதிதாக ஆரம்பிக்கப்பட; குழந்தை இறந்ததினால் மிகுந்த துக்கத்தி லிருக்கும் மீரா-பங்கஜ் தம்பதியினரின் ஆறுதலுக்காக; அசுத்த ஆவியின் அலைக்கழிப்புக்கு உட்பட்டிருக்கும் மோகி, சங்கர், கமலா, ராஜு, நானா, மணிலால், லலிதா மற்றும் நிக்கிதா ஆகியோரின் விடுதலைக்காக ஜெபிப்போம்.

**6 நவம்பர்**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
செல்வி. மய்னா மிலி

## உத்தரப் பிரதேசம்

### கோண்டா சிறுவர் விடுதி:
### ஓம் பிரகாஷ் குப்தா & தும்பா

**துதிக்க:** விடுதியின் மாணாக்கர்கள் விசுவாசத்தில் வளர்ந்து வருவதற்காகவும், படிப்பில் ஆர்வம் காண்பித்து வருவதற்காகவும்; பெரிய வகுப்பு மாணவர்கள் சிறுவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுப்பது மட்டுமன்றி வேதாகமக் கதைகளையும் கற்றுத் தருகின்றனர். கோண்டா அருகாமையில் வசிக்கின்ற விசுவாசிகள் உறவினர்களுக்குச் சாட்சிப் பகிர்ந்து இயேசுவின் அன்பினை எடுத்துரைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 12-ம் வகுப்பு படிக்கும் சுமிட் மற்றும் நிஷ்சு தங்கள் பாடத்தை கவனம் சிதறாமல் படிக்க; நம் விடுதி மாணவன் அமனின் தந்தை இருசக்கர வாகன விபத்தினால் பேசும் திறனை இழந்திருக்கிற அவருக்கு பரிபூரண சுகம் கிடைக்க; நமது விடுதி நிலத்தின் மீதுள்ள வழக்கை விசாரிக்கும் வி.பி. நாக் அவர்களுக்கு தேவன் ஞானத்தைக் கொடுக்கவும், அவ்வழக்கின் தீர்ப்பு நமக்கு சாதகமாக முடியவும். நாம் ஊழியம் செய்யும் சம்புதாரா, தில்கை, நாத்நகர், பாலுவா மற்றும் குக்குர்போவா கிராமங்களில் கர்த்தர் ஆத்தும அறுவடையைத் தர ஜெபிப்போம்.

### காட்டம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** பொய்வழக்கு புனையப்பட்ட நிலையில் உண்மை வெளிப்பட்டதினால் காவல்துறை வழக்கில் இருந்து வெளிவந்த சத்தேந்திராவுக்காக; உயிருக்கு ஆபத்தான நிலையில் இருசக்கர வாகனம் விபத்துக்குள்ளான போதிலும் ஜெய்லால் அதிலிருந்து ஆச்சரியவிதமாக தப்புவிக்கப்பட்டதற்காக; கோலு, நரேஷ், ஷப்னம், ராணி மற்றும் மஹிமா தங்கள் சுகவீனத்தில் ஜெபம் செய்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசு கிறிஸ்துவின் தீவிர விசுவாசியான மாரா கிராமத்தின் சாந்தி தன் பக்கவாத நோயிலிருந்து குணமடைய; இளம் விசுவாசிகளான சாரா, மஹிமா மற்றும் பிரியங்கா ஆகியோருக்கு நல்ல வாழ்க்கைத் துணைகள் கிடைக்கவும், அமித், ஜேக்கப், அனீஷ் மற்றும் சௌரபுக்கு நல்ல வேலைகள் கிடைக்கவும் ஜெபிப்போம்.

### *கரிசனையுள்ள கர்த்தர்!*

*மகாராஷ்டிரா மாநிலம் கப்ராடா பணித்தளத்திலுள்ள பட்டாடி கிராமத்தைச் சேர்ந்த விசுவாசி கோபால்பாய்தினமும் தூங்கப்போகும் முன் ஜெபிக்கும் வழக்கம் உள்ளவர். அன்று ஆழ்ந்த தூக்கத்திலிருந்தவர் ஒரு கனவு கண்டார். அதிலே அவருடைய மாட்டின் கழுத்து கட்டப்பட்டிருந்த கயிறினால் இறுக்கப்பட்டு நாக்கு வெளியேத் தள்ளி சாகிற மாதிரி கனவு வந்தது. உடனே திடுக்கிட்டு விழித்தவர் படுக்கையிலிருந்து எழுந்து அந்த நடு இரவில் வீட்டுக்கு வெளியே வந்து மாடு கட்டப்பட்டிருந்த கொட்டகைக்கு வந்துப் பார்த்தவர் அதிர்ந்துப் போனார். அங்கே அவர் கனவில் கண்டபடி அவருடைய மாட்டின் கழுத்து கயிற்றினால் நெருக்கப்பட்டு துடித்துக்கொண்டிருந்தது. உடனடியாக அருகில் இருந்த கோடாரியால் கயிற்றை அறுத்து மாட்டை காப்பாற்றினார். உடனே அங்கேயே முழங்காலில் நின்று மாட்டைக் காப்பாற்றினதற்காக கர்த்தருக்கு நன்றி சொன்னது மட்டுமன்றி மறுநாள் தேவன் செய்த இந்த பெரியக் காரியத்தை அநேகருக்குச் சொல்லி தேவநாமத்தை மகிமைபடுத்தினார்.*

7 நவம்பர்
செவ்வாய்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. பாலசுப்ரமணியன் (ஏ) சைமன் பீட்டர்

## கைம்கஞ்ச்:

### எபநேசர் ஜி. சாம் & ஜெபராணி

**துதிக்க:** இயாப்பூர் கிராமத்தின் ருக்மணி நுரையீரல் பாதிக்கப்பட்டு ஆலயம் வந்து ஜெபித்து சுகமாகி பின் விசுவாசத்திலிருந்து பின்வாங்கிபோய்விட்டார். மீண்டும் நுரையீரல் பாதிக்கப்பட்டு பேசவும், சாப்பிடவும் முடியாமல் மரணத்தைத் தழுவ வேண்டி விஷம் கேட்க வேண்டிய சூழ்நிலைக்கு ஆளானார். ஊழியர் அவரை சந்தித்து இயேசு கிறிஸ்துவின் மன்னிப்பு, அன்பைப் பற்றி கூறவே, மனந்திரும்பி பாவ மன்னிப்பு கேட்டு ஜெபம் செய்தார் ருக்மணி. தற்போது அவர் நன்றி இயேசு என்று மெதுவாக கூறிவருகிறார். ரித்திக் சம்பளம் சரியில்லை என்று வேலையை விட்ட நேரத்தில் வேறு இடங்களில் வேலையும் கிடைக்காமல், ஜெபம் செய்ததினால் அதே வேலை நல்ல சம்பளத்தில் மீண்டும் கிடைக்கச் செய்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயத்திற்கு வந்து தங்கள் தேவைகள் சந்திக்கப்பட்டபின் ஆலயம் வருவதை நிறுத்தினவர்கள் தேவனுடைய வல்லமையை உணர்ந்து மீண்டும் ஆலயம் வர; தன்னுடைய வீட்டிலே அதிக பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிற கங்கலும்மா ஜெபத்தினால் எல்லாவற்றையும் வெற்றிக்கொள்ள; மகள் சுகவீனத்தினால் தேவம்மா ஆலயம் வர தடைப்படுகிறது. ஆகவே இக்காரியத்தில் தேவன் மகளுக்கு நல்ல சுகத்தை சீக்கிரம் தர ஜெபிப்போம்.

## ஹசேரன்:

### எஸ். ராஜன் & ஜெபமலர்

**துதிக்க:** ஹசேரன் கிராமத்தின் திருமதி. கிஷோருக்கு 3 குழந்தைகள் பிறந்து இறந்து விட்டன. கணவருக்கு வேறு திருமணம் முடிந்து அந்த பெண் மூலம் இரு குழந்தைகள் பிறந்து விட்டன. திருமதி. கிஷோர் வாரந்தோறும் ஆலயம் வந்து அழுது ஜெபிப்பது வழக்கம். தற்போது ஜெபத்தின் பலனாக அழகான குழந்தையை நல்ல ஆரோக்கியத்துடன் பெற்றுள்ளார். இளம் பெண்களான ரஜனி, நம்தா மற்றும் ரீனா கிரமமாக எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறுவர்களுக்கு வேதாகம வகுப்புகள் அவர்தம் கிராமங்களில் நடத்தி வருகின்றனர். தேகாருவாபூரைச் சேர்ந்த சமீர்நாத் மீது பாம்பு ஏறிச் சென்ற போதிலும் அது கடித்துவிடாமல் பாதுகாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அசுத்த ஆவியின் தாக்குதலுக்கு ஆளாகி வீட்டில் சமாதானமின்றி, உடல் நலம் பாதிக்கப்பட்டிருக்கின்ற சகோதரிகள் பூணம், ஊர்மிளா மற்றும் சகோ. பிரேம் சிங் குடும்பம் விடுதலை பெற; சந்திராபஹனின் மகள் மான்வி 5 வயதிலிருந்தே உடல் நலமின்றி இருந்து வந்தார், தற்போது 10 வயதாகிறது. ஆலயம் வந்து ஜெபிக்கும் இந்த குடும்பத்தின் கண்ணீர் துடைக்கப்பட; மனநலம் பாதிக்கப்பட்டு இருக்கும் குட்டி, விகாஷ் மற்றும் குட்டு சுகம் பெற ஜெபிப்போம்.

**8 நவம்பர்**
**புதன்**
*உபவாச ஜெபநாள்*

### டூண்ட்லா: பச்சியாபாய் போஹ்னாபாய் & சவிதாபேன்

**துதிக்க:** பிரிசோபாத் ஊரைச் சேர்ந்த காந்திதேவி புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்துவந்த நிலையில் நமது ஆலயம் வந்து விசுவாசிகளுடன் இணைந்து ஜெபிக்க ஆரம்பித்தார். பிறகு மருத்துவப் பரிசோதனைக்கு செல்லும் போது எல்லாம் சரியாக இருக்கிறது என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர். ஹல்பூரா மற்றும் கலியான் கிராமங்களில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் 40 பேர் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றனர். திருமணத்திற்கு அநேக வருடங்களுக்குப் பிறகு ஜெபத்தினால் மனோஜ் மற்றும் ரஜ்வீர் குடும்பத்தினர் குழந்தைப் பேறு அடைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுர்னி, கியாமை மற்றும் பாலியா கிராமங்களில் இரவு கூட்டங்கள் ஆரம்பிக்க நல்ல சூழ்நிலைகள் அமைய; ஆரோன் ப்ளாக் பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கும் வெளிப்புற நற்செய்தி அறிவிக்கும் கூட்டங்கள் எந்தவித எதிர்ப்புமின்றி நடைபெறவும், அநேக ஆத்துமாக்கள் ஆதாயம் செய்யப்படவும்; கலியான், துராசி மற்றும் துராமை ஊர்களில் உள்ள நம் விசுவாசிகளின் பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்விலும், படிப்பிலும் சிறந்து விளங்க ஜெபிப்போம்.

## மத்தியப் பிரதேசம்

### சிரியா: மகேந்திரன் & புஷ்பம்

**துதிக்க:** 11 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் அடியவர்களாயினர். சந்திராபூரா கிராமத்தைச் சேர்ந்த சிவலால் குடியை விட்டு குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டு விசுவாசக் குடும்பமானார். மான்படியா & தேவ்நல்லியா கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. நந்தியா ஆலயத்திற்குப் புதிதாக இரு குடும்பங்கள் வந்து ஆராதனையில் கலந்துகொள்ளுகின்றனர். தேவலா கிராமத்தின் 4-வயது ரேக்கா நீண்டநாட்களாகத் தொந்தரவு கொடுத்துவந்த தீய ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தினால் விடுவிக்கப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தீய ஆவியின் அலைக்கழிப்பால் வலிப்பு நோயினால் அவதியுற்று வருகிற பில்கேட் கிராம 27 வயது பினுபாய் சகோதரி விடுதலைபெற; நிலத்தகராறினால் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களான அவரது உறவினர்களால் தாக்கப்பட்டு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிற பூரிபாய் சகோதரியும், அவரது மகனும் சுகம் பெறவும், அவர்களுக்கு நீதி கிடைக்கவும் ஜெபிப்போம்.

### திக்கற்றோருக்கு சகாயர்!

*மத்தியப் பிரதேசம் மாநிலம், சிரியா பணித்தளத்தில் சந்ரபூரா கிராமத்தைச் சேர்ந்த சிவ்லால் பெரிய குடிகாரர், குடும்பத் தினராலும் பிறராலும் குடியின் காரணமாக வெறுக்கப்படுகின்றவர். சமீபத்தில் அதிகக் குடியின் காரணமாக ஒரு விபத்தில் சிக்கி கால் முறிவு ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு யாருடைய உதவியுமின்றி கஷ்டப்பட்டு வந்தார். மருத்துவமனைக்கு ஊழியம் செய்ய சென்றிருந்த நமது ஊழியர் அவரைச் சந்தித்து இயேசுவின் அன்பினைக் குறித்து பகிர்ந்துகொண்டு குடியின் தீமை யினை எடுத்துரைத்தார். அனைவராலும் வெறுக்கப்பட்ட நிலையில் இயேசு தம்மீது காட்டும் கரிசனையினால் ஈர்க்கப்பட்டு தன் பாவத்தை விட்டொழித்து இயேசுவை ஏற்றுக்கொண்டார். சுகமடைந்து மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பியவர் திருமுழுக்கு எடுத்து ஊராருக்கும் குடும்பத்தினருக்கும் சாட்சிப் பகிர்ந்தார்.*

9 நவம்பர் வியாழன்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. செல்லத்துரை J., திரு. ஜெரால்டு சேவியர்

### பாக்லி & உதய்நகர்:

### டி. வில்சன் & ரஷ்மித்தா பரிடா

**துதிக்க:** ஆதர்ஷ் நகர், சோக்கிமோ காலா மற்றும் காமத் கிராம சபைகளில் முதன்முறையாக அறுப்பின் பண்டிகை கோலாகலமாக விசுவாசிகளின் சிறந்த பங்களிப்புடன் நடைபெற்றது. 11 நபர்கள் பலாசி நதியில் ஞானஸ்நானத்தின் மூலம் இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தை அறிக்கையிட்டனர். கோல்ட்ரிகரி கிராமத்தில் மீண்டும் ஆராதனை தொடங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தினிமித்தம், உள்ளூர் கிராமவாசிகளால் அதிகமாக தொந்தரவைச் சந்தித்து வரும் ஹரிசிங் சுனிதா தம்பதியினருக்காக; தீவிர நரம்பு தளர்ச்சி நோயினால் அவதியுறும் ரத்தாடி கிராம கண்டாலால்பாய் சுகம் பெற; காவல்துறை மற்றும் உள்ளூர் கிறிஸ்தவ எதிர்ப்பாளர்களால் உபத்திரவத்தினை நித்தமும் சந்தித்து வரும் கித்துமார் மற்றும் பேடிபூரா கிராம விசுவாசிகளுக்காக ஜெபிப்போம்.

### பால்: வேங்கடேஷ் வடார் & ஷீபா

**துதிக்க:** 3 கிராமங்களில் பகலில் நற்செய்தி அறிவித்தல் இரவு நாடகம் மூலம் இயேசுவை அறிவித்தல் என்று எந்தவொரு தடைகளுமின்றி 3 நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்காக; மனமுறிவு ஏற்பட்டு பிரியும் நிலையிலிருந்த ரீனாபாயின் மகள் மற்றும் மருமகன் ஜெபத்தின் மூலம் சமாதானமாகி திரும்பச் சேர்ந்து வாழத் தொடங்கியுள்ளதற்காக; ஏழு கிராமங்களில் நடைபெற்ற பெண்கள் கூடுகையில் 86 பேர் உற்சாகத்துடன் நாள் முழுவதும் கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி கிராமத்தின் அரசாங்கப் பிரதிநிதியாக இருப்பதினிமித்தம் இந்த அரசாங்கப் பணியில் இருக்கக்கூடாது என்று எதிர்ப்பவர்களின் எதிர்ப்புகள் மறைய; அசுத்த ஆவியின் பிடியினால் கஷ்டப்படுகிற சார்முலி கிராமத்தைச் சேர்ந்த துவார்க்பேன் விடுதலைபெற; கார்போர்டி கிராமத்தின் இளம் வாலிப பெண் சீனி வேற்று மதக் கொண்டாட்டங்களைப் பார்க்கச் சென்றிருந்தபோது அங்கே அவரை அசுத்த ஆவி பிடித்துவிட்டது, மிகுந்த அலைக்கழித்தல் உண்டாக்குகின்ற துஷ்ட ஆவியிடமிருந்து சீனி விடுதலைபெற ஜெபிப்போம்.

### சிதறிச் சென்றவர்கள் அறிவித்த சுவிசேஷம்!

*சத்தீஸ்கட் மாநிலத்தில் கார்கொட்டா பணித்தளத்தின் மக்ரி கிராமத்தின் சந்திரமணி ஒரு நல்ல விசுவாசி. தன் உறவினர்களும் பிற கிராம மக்களும் தன் வீட்டிற்கு வரும் நேரங்களில் அவர்களுக்கு இயேசுவைப் பற்றிக் கூறி வருவதை தன் கடமையாகக் கருதினார். இவருடைய ஊழியத்தினால் எரிச்சலடைந்த மத தீவிரவாதிகள் இவருக்கு பல முறை எச்சரிக்கை விடுத்தனர். ஆனாலும் அவர் தொடர்ந்து சுவிசேஷப் பணியைச் செய்துவரவே, கோபமுற்ற எதிர்ப்பாளர்களின் மிரட்டல்களால் மக்ரி கிராமத்தில் இருக்க முடியாமல் நம்விசுவாசிகள் வசிக்கும் ராய்கேரா கிராமத்தில் தஞ்சம் புகுந்து ஒரு சிறிய வீடு கட்டி அதிலே வசித்து வந்தார். வெளி கிராமத்தில் புதிய சூழ்நிலையில் வசிக்க நேர்ந்தாலும் அவருடைய ஆத்தும ஆதாய தாகம் தீராமல் இங்கும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் இயேசுவைப் பற்றி ராய்கேரா கிராம மக்களுக்கு சுவிசேஷம் எடுத்துக்கூறி ஜெபித்து வருகிறார். தேவனுக்கே மகிமை!*

## 10 நவம்பர் வெள்ளி

### தார்:
### கோபி கிருஷ்ணன் & மேனகா

**துதிக்க:** நாயபுரா கிராமத்தின் ஆற்றின் கரையருகே வீடுகட்டி வசித்து வந்த மம்தா பேய் மழைபெய்து ஆறு கரைபுரண்டு ஓடினபோது ஜெபித்ததினால் அவரது வீடு வெள்ளத்தின் பாதிப்புக்குள்ளாகாமல் பாதுகாக்கப்பட்டதற்காக; சிக்கார்பூர் மற்றும் லால்பாக் கிராமங்களில் தெருமுனை கூட்டங்கள் மூலம் நற்செய்தி பகிரப்பட்டதற்காக; முழு இரவு ஜெபத்திலே உற்சாகமாக விசுவாசிகள் பங்குபெற்று மற்ற மக்களின் இரட்சிப்புக்காக ஜெபித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியர்கள் கடந்து செல்லும் போது சபித்து மிரட்டல் விடுக்கும் பக்கானர் கிராம மக்களின் மனந்திரும்புதலுக்காக; சிக்கார்பூர் மற்றும் சின்ரேல் கிராமங்களில் கூட்டங்கள் நடத்த எதிர்ப்புத் தெரிவிக்கும் நபர்கள் மனந் திரும்ப; மோத்திராம் மற்றும் அம்பாலால் பின்மாற்றம் அடைந்ததோடு பிறரையும் தூண்டிவிடுகிறார்கள். அவர்கள் தேவனால் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

### தர்ணி:
### ஏகலைவன் ஜேம்ஸ் & பெரில்

**துதிக்க:** நான்கு நபர்கள் இயேசுவே தெய்வம் என்று விசுவாச அறிக்கை யிட்டதற்காக; உத்வாலி, ரக்பாலி கிராமங்களில் நற்செய்தி தெருக்கூட்டம் மூலமாக அறிவிக்கப்பட்டு 405 சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக; தார்மகோல் கிராமத்தில் புதிதாக ஆராதனை ஆரம்பிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கெராமல் கிராமத்தின் தினா – சீமா தம்பதியினர் குழந்தை செல்வத்தால் ஆசீர்வதிக்கப்பட; சண்டையிட்டுப் பிரிந்து சென்றுள்ள குடுக்கி கிராம கர்தியாபாயின் மனைவி திரும்பி வந்து சமாதானத்துடன் வாழ; நெருங்கி வரும் புறமதத்தவரின் திருவிழாக்களினால் நமது ஆராதனைகள் மற்றும் விசுவாசிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாமல் இருக்க ஜெபிப்போம்.

### கடௌரா:
### பிமல் சந்திர முர்மு & சீத்தாமணி

**துதிக்க:** ஜெய்ராம்பூர் மற்றும் கைரா–கேரா பகுதியில் சுவிசேஷக் கூட்டங்கள் நடத்தி நற்செய்தி பிரதிகள், புதிய ஏற்பாடு புத்தகங்கள் கொடுக்க தேவன் கிருபை செய்தார். பிரிந்து சென்ற தன் மனைவிக்காக ஜீத்து விசுவாசத்துடன் 3 மாத காலமாக ஜெபித்து வந்ததின் பலனாக, அவரின் மனைவி திரும்ப வந்து சேர்ந்துவாழ்கிறார். நமது சுதேச ஊழியர் பலாதீனின் உடல் நிலை தற்போது சீராக இருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் சபை மூப்பர்கள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெறவும், மூப்பர்கள் ஆத்தும ஆதாயம் செய்ய ஊக்கப்படுத்தபடவும், சிர்னி ஆலய சுற்றுச்சுவர் வேலை சீக்கிரம் முடிவடைய; புல்காலி மற்றும் ராஜ்குமார் ஆகியோரின் கண்பார்வை சரியாகவும், சுகனின் தீராத தலைவலி குணமாகவும் ஜெபிப்போம்.

**11 நவம்பர்**
**சனி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. கந்திகுப்ப இஸ்ரேல்
திருமதி. பிரேம்லதா சுரேஷ் மால்தோ
திருமதி. ஜாய் பெல்லா இவாஞ்சலின் சுனில்
செல்வி. ஏஞ்சல் ராஜ் R.V.

## பீஹார்

### ராணிகன்ஜ்: தர்மேந்தரா பரிச்சா & மதுஸ்மிதா பானி

**துதிக்க:** ரிசி, மிர்கன்ஜ் மற்றும் டக்கைடா கிராமங்களில் முதன்முறையாக நற்செய்தி எடுத்துரைக்கப்பட்டது. குருதேவிற்கு நீண்ட நாட்களாக இருந்துவந்த தீராத வயிற்றுவலியிலிருந்து ஜெபத்தினால் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிக்னி கிராமத்திலிருக்கும் ஒரே விசுவாசியான மதன் ரிசிதேவ் தன்னுடைய சாட்சியின் மூலம் அவரது உறவினர்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்த; பிசாரியா கிராமத்தில் நற்செய்திக்கு ஆர்வம் காட்டும் சுசான்ந்த் மேத்தா கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### ராஜ்மஹால் பிராந்தியம்: ஆல்பர்ட் பிரபாகரன் & முருகம்மாள் எஸ்தர்

**துதிக்க:** மாதந்தோறும் இரத்த மாற்று சிகிச்சைச் செய்யப்பட வேண்டியச் சூழ்நிலையில் கர்த்தர் மீது விசுவாசம் வைத்து ஆலயம் வந்து ஜெபித்ததினால் பரம்பூர் கிராம ஸ்ரீராம் ரவி சுகம் பெற்றார். மனிக்கா கிராமத்தைச் சேர்ந்த 15 வயது ஆகாஷ் மற்றும் பதர்காமா கிராம கொய்னி தேவி ஆகியோர் ஜெபத்தின் மூலம் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நகர்உந்டாரி பகுதியில் ஊழியம் செய்ய அனுப்பப்பட்டுள்ள நமது ஊழியர் பிபின் பூஹாரி குடும்பம் வல்லமையாக பயன்படுத்தப்பட; மனிகா பணித்தளத்தில் பீஹாரா கிராமத்தில் ஆலய ஆராதனைக்கு இடையூறு விளைவிக்கும் குகன் குடும்பத்தினர் மனந்திரும்ப; பக்கவாதத்தினால் அவதியுறும் மார்த்தா மால்தோ, வலிப்பு நோயினால் வேதனையுறும் ரூத் மால்தோ ஆகியோர் சுகம் பெற ஜெபிப்போம்.

### தீன்பஹார்: நெகேமியா & அனாமிகா பெகு

**துதிக்க:** மடன்சாஹி மற்றும் சகரான்ஜி கிராம விசுவாசிகள் அருகிலிருக்கும் கிராமங்களில் வசிக்கும் உறவினர்களுக்குத் தங்களின் சாட்சி மூலம் நற்செய்தி அறிவித்து வருவதற்காக; நற்செய்தி பிரதிகள் விநியோகத்தின் மூலமாக சுமார் 70 பேருக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டது. சகரான்ஜி கிராம சபையில் இரு குடும்பத்தினரிடையே நிலவிய பகை, சமாதான ஜெபக்கூட்டம் மூலமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்தி அறிவிக்க மிகுந்த எதிர்ப்பு தெரிவித்து வரும் மெஹிடிடொங்கா கிராமத்தைச் சேர்ந்த ராஜேஷ் கர்கட்டா மனந்திரும்ப; நற்செய்தியின் தாக்கத்தைத் தடுக்கும்விதமாக ஓராவன் இன மக்கள் மத்தியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கரம் பூஜா என்கிற நிகழ்ச்சி பலன் தராமல் போக; மேலேயிருந்து கீழே விழுந்து கைகால் செயலிழந்து போயிருக்கிற ஜமல்பூரைச் சேர்ந்த விமல்பாடாவிற்கு சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

## 12 நவம்பர் ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சங்கர் P.

### தல்பும்கார்: வகேரா பிரமோத் குமார் & ஜஷோதாபேன்

**துதிக்க:** 8 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை பறைசாற்றினார்கள். ஊழியரின் மனைவி யசோதாவை தீ விபத்திலிருந்தும், இரு சக்கர வாகனத்தில் ஊழியத்திற்கு போகும் போது கீழே விழுந்தபோதும் கர்த்தரின் கரம் கூட இருந்து பாதுகாத்ததற்காக; நம் விசுவாசியின் இறுதி சடங்கு பார்டி கிராமத்தில் கிறிஸ்தவ முறைப்படி எந்தவித எதிர்ப்புமின்றி நடந்து முடிந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தை விட்டுப் பின்வாங்கிச் சென்றுள்ள பார்டி கிராம சபையின் மூப்பர் புக்காய் டுடு மனந் திரும்பி விசுவாசத்திற்குள்ளாக வர; பார்டி கிராமத்தில் மனைவியை இழக்கக் கொடுத்துள்ள ரகுநாத் ஹன்ஸ்தாவின் ஆறுதலுக்காக; பணித்தளத்தில் பணிபுரிய அர்ப்பணமுள்ள உள்ளூர் ஊழியர்கள் கிடைக்க ஜெபிப்போம்.

### மோகுல் பஹாடி: ஹமுவேல் லிம்மா & ரீட்டாஞ்சலி கரடா

**துதிக்க:** ராம்கார் மற்றும் ராஸ்நலா கிராமங்களில் தலா ஒரு குடும்பம் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக; ஆண்கள் கூடுகை, சபை மூப்பர் பயிற்சி மற்றும் ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் பயிற்சி முகாம் ஆகியவை சிறப்பாக நடைபெற்றதற்காக; காத்கப்கூரியா பகுதியில் கிரமமாக ஒவ்வொரு மாதமும் நடைபெற்று வரும் முழுஇரவு ஜெபத்திற்காகவும் அதில் பங்குபெற்று வரும் அநேக விசுவாசிகளுக்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மகனை இழக்கக்கொடுத்துள்ள பஹ் கிரிஹிக்காகவும், மகளை இழக்க கொடுத்துள்ள ராஜேந்திர கிரிஹிக்காவும்; நற்செய்திக்கு கதவை அடைத்துள்ள சாப்பூடியா, சராய்பாணி மற்றும் ரேக்காபாணி கிராமங்களின் இரட்சிப்புக்காக; மனநலம் சரியில்லாத ராசேல்குமார் சுகமடைய ஜெபிப்போம்.

### பர்ஹர்வா: மல்லா வித்யாசாகர் & தீபிகா ராணி பானி

**துதிக்க:** முகுந்த் ஷா மற்றும் பாக்யதேவி ஷா என்ற இரண்டு நபர்கள் ஷா இனத்திலிருந்து கிறிஸ்துவை விசுவாசித்து ஆலயம் வருவதற்காக; 49 நபர்கள் கிறிஸ்துவை அறிக்கையிட தயாராக இருப்பதற்காக; ராணிதேவி, சாராதேவி, துலாரிதேவி மற்றும் மேஹாதேவி சகோதரிகளின் பிள்ளைகள் அதிக காய்ச்சலினால் அதிக நாட்கள் பாதிக்கப்பட்டிருந்து ஜெபத்தினால் குணமடைந்ததற்காக; வேலைக்காக தூர இடங்களுக்குச் சென்று காணாமல்போன, காஞ்சன் தேவியின் கணவர் ஜெபத்தின் விளைவாக நான்கு மாதங்களுக்கு பின் சுகமாக வீடு திரும்பியதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியர் தீபிகா ராணியின் இரண்டாவது பிரசவம் சுகமாக நடந்தேற; விசுவாசத்தில் பின்மாற்றமடைந்துள்ள நிர்மலா தேவி, மோத்திலால் தூரி மீண்டும் ஆலயம் வர; புதிய விசுவாசி பின்கிதேவிக்கு இருக்கின்ற குறைவான இரத்த அணுக்கள் சரியான அளவுக்கு வர ஜெபிப்போம்.

## 13 நவம்பர் திங்கள்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அனில்பாய் கன்விட்

### சிக்காரிபாடா: சுகாந்தோ குமார் சிங் & ராணி லாசரஸ்

**துதிக்க:** 17 நபர்கள் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டதற்காக, 11 கிராமங்களில் வெளிப்புறக் கூட்டங்கள் மூலம் நற்செய்தி அறிவிக்கப்பட்டு சுவிசேஷ கைப்பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக, சபை மூப்பர்களுக்கு சிறப்பு கூட்டம் நடத்தப்பட்டு சபை நடத்துதல் பற்றிய காரியங்கள் கற்பிக்கப்பட்டதற்காக; 3 இடங்களில் வீட்டு ஜெபக்கூட்டங்கள் தொடங்கப்பட்டு நல்ல முறையில் நடந்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** படோசிமல் சபை மூப்பர் முலின்டர் ஹெம்ரும் ஊர் மக்களால் சந்தித்து வருகிற எதிர்ப்புகள் மறையவும் அவர் விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும்; திட்டமிட்டிருக்கின்ற இயேசு கிறிஸ்துவை அறிக்கை செய்யும் ஆராதனைகள் சிறப்பாக எந்த தடையுமின்றி நடைபெற; சிறுநீரகப் பிரச்சினையினால் அவதியுறும் ஜெட்டின் மராண்டி அற்புத சுகம்பெற ஜெபிப்போம்.

### தம்னி: ஜாண்பால் ஹாரிஸ் & விமலா டெய்சி

**துதிக்க:** லிலாடெனி கிராம சபை மூப்பர் சாமுவேல் மால்தோ மற்றும் கோர்குடியா கிராமத்தின் சுலைமான் மால்தோவுக்கு விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது அருளப்பட்ட நல்ல சுகத்திற்காக; புஷ்ருகுடியா, தகபேடா மற்றும் பட்பஹாடி கிராமங்களில் கிரமமாக நடைபெற்று வரும் சிறு ஆராதனைக் குழுக்களுக்காக; தம்னி பணித்தளத்தில் நடைபெற்ற இரண்டு நாட்கள் ஆவிக்குரிய கூடுகையில் திரளாக கலந்து கொண்ட விசுவாசிகளுக்காகவும், காரியங்களை உற்சாகமாக முன் நின்று செய்த வாலிபர் ஐக்கியத்திற்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசிகளின் ஆவிக்குரிய மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய தடையாக இருக்கும் குடி முற்றிலும் விலக்கப்பட; குடிப்பழக்கத்தில் சிக்கியுள்ள நமது விசுவாசிகளை சபையின் மூப்பர்கள் நல்வழியில் வழிநடத்த; பேலக்குடியா சபை விசுவாசிகள் மற்ற வேலைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் ஓய்வு நாளில் ஆலயம் வருவதற்கு ஆர்வமாக இருக்க ஜெபிப்போம்.

### கங்குபாடா சிறுமியர் விடுதி: ஈவ்லின் பாக்கியா, சுஷாஜித் சேனாபதி

**துதிக்க:** 12-ம் வகுப்பு முடித்து கல்லூரியில் படிக்க சரிதா சர்லஸ், சுர்ஜா மற்றும் மேரிக்கு இடம் கிடைத்துள்ளதற்காக; உடல் நலம் குறித்து நடத்தப்பட்ட கூட்டம் மாணவர்களுக்கு பிரயோஜனமாக இருந்ததற்காக; படிப்பிலும், வேதாகம அறிவிலும் நமது மாணவிகள் சிறந்து விளங்குவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நர்சிங் படித்துக்கொண்டிருக்கும் நமது மாணவிகள் சாட்சியுடன் வாழ மற்றும் படிப்பிலே நல்ல முன்னேற்றம் காண; கல்லூரிப் படிப்புக்கு காத்துக்கொண்டிருக்கும் மார்த்தா மற்றும் சாந்திக்கு இடம் கிடைக்க; அடிக்கடி சுகவீனம் அடையும் சஞ்ஜலி, மெர்சி, மஞ்ஜு உடல் பலமடைய ஜெபிப்போம்.

## 14 நவம்பர்
செவ்வாய்

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரஞ்சித் ஜேம்ஸ்
திரு. ஜாண் C.H., திருமதி. ஜெலின் சங்கர்
செல்வி. மகேஷ்வரி ரெபேக்கா
திரு. வால்வி தீனா தானா

### பாதர்காமா:
**கிரிஷான் குமார் & சாந்திலால்**

**துதிக்க:** வைரல் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இருந்த சுரேந்திரா, நீலம் மற்றும் மஹிலாலா குடும்பங்கள் சுகமடைந்ததற்காக; பலவித உடல் உபாதைகளினால் அவதியுற்று வந்த மனேஷ் மூன்று நாட்கள் உபவாசக் கூடுகையில் கலந்துகொண்டு ஜெபித்த போது உடல் பலவீனங்கள் நீங்கி மனதைரியம் அடைந்ததற்காக; பபிதா, நீலம் மற்றும் சுலோச்சனா சகோதரிகளுக்கு தேவன் அருளிய குழந்தை பாக்கியத் திற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரம்பா சகோதரியின் காதி லிருந்த ஒரு பெரிய மருவின் காரணமாக கேட்கும் திறன் குறைந்து காணப்பட்ட நிலையில் ஜெபத்தின் மூலம் அந்த மரு விழுந்துவிட்டதற்காக; அசுத்த ஆவியின் பிடியிலிருக்கும் ஜெருன்தாஸ் அதிலிருந்து விடுதலைபெற; ஊழியத்தின் எல்லைகள் விஸ்தாரமானதால் ஊழியம் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர்கள் முன்வர ஜெபிப்போம்.

### மசலியா: ஷிம்ரா & ஜெரினா

**துதிக்க:** 7 நபர்கள் இயேசுவைப் பற்றிக் கொண்டு விசுவாச வாழ்வுக்குள் வந்துள்ளனர். நடக்க முடியாமலிருந்த சந்திரசோரேன் ஜெபத்திற்கு தினமும் வந்ததினால் நடந்து வரும் நிலைக்கு சுகமாகி இருப்பதற்காக, மன அழுத்தத்தின் காரணமாக பைத்தியக்காரன் போல நடந்து கொண்டிருந்த விஜய் முர்மு ஜெபத்தின் மூலம் சுகம் பெற்று மற்றவர்களைப் போல நல்ல நிலைக்கு வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்கள் பிள்ளைகள் ஷிலா (14-வயது) ருபிலால் (11-வயது) இருவரும் பேச முடியாமல் இருக்கும் நிலையில் விசுவாசத்திற்குள் வந்து தினமும் ஆலயம் வந்து ஜெபிக்கும் குடும்பத்தின் ஜெபம் கேட்கப்பட; புலாஷ், டாலிடி, நோமிமஹால், மாண்ட்ரைடி, லௌடி, திலையே, புருடி மற்றும் திம்பர் கிராமங்களில் நற்செய்தி உட்புகவும், சபைகள் ஆரம்பிக்கப்படவும், ஹாத்தியாபாத்தார் ஆலய மூப்பர் ரம்சன் பெத்ரா நல்ல சுகம் பெறவும், ஆலயம் வந்து விசுவாசிகளை வழி நடத்தவும் ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** 19 கிராமங்களில் சுமார் 600 நபர்களுக்கு நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டதற்காக; நீம்டன்கா, சல்பனா மற்றும் மாணிக்பூர் கிராமங்களில் வீட்டு ஆராதனைக் குழுக்கள் சிறப்பாக நடைபெற்று வருவதற்காக; அமித் சோரேன் மற்றும் லுக்கிராம் முர்மு பாம்பு கடியிலிருந்து காப்பாற்றப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** 3 வயதாகியும் நடக்க, பேச இயலாமல் இருக்கிற சிறுவர்கள் அமித் சோரேன், பூர்ண ஒரியன் சுகம்பெற; காலாஜார் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள நமது சுதேச ஊழியர் சுஜித் கிஸ்கு விரைவில் பூரண சுகம்பெற; விசுவாசிகள் தங்கள் உறவினர்களுக்கு இயேசுவை அறிமுகம் செய்துவைக்கும் திட்டம் நல்ல பலனைக் கொடுக்க ஜெபிப்போம்.

**15 நவம்பர்**

**புதன்**

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஆலிஸ் பிசோயி

திருமதி. வசாவா சவிதாபேன் பச்சியாபாய்

### ஜாம்போனி:

**இப்ராயிம் மாலி & புரோசன்சிதா**

**துதிக்க:** 3 நபர்கள் கர்த்தரைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட தற்காக; ராம்நகர் கிராம விசுவாசிகள் நற்செய்தி எதிர்ப்பாளர்களிடமிருந்து காப்பாற்றப்பட்டதற்காக; சல்காட் கிராமத்தில் நற்செய்திக்கு ஆர்வம் காட்டுகிறவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராம்நகர் கிராமத்தில் நம் ஊழியத்தை எதிர்க்கின்ற மோகன் சோரேன், மல்லியா சோரேன், பிரு சோரேன் (ஊர் தலைவர்) சாந்தினி சோரேன் மற்றும் மக்காயா சோரேன் மனந்திரும்ப; நற்செய்திப் பிரதிகளை ஆர்வமுடன் வாங்கிச் சென்றிருக்கும் புல்பஹாரா கிராம மக்கள் கர்த்தரை இன்னும் அறிந்து கொள்ள ஜெபிப்போம்.

## அஸோம்

### ஜோனை:

**சுனில் பிரசாத் சிங் & ஜாய் பெல்லா**

**துதிக்க:** ஒரு நபர் இயேசுவின் அன்பினால் இரட்சிக்கப்பட்டு தேவமந்தையில் இணைந்துள்ளார். ஒரு கிராமத்தில் புதிதாக நற்செய்தி பகிரப்பட்டது. தீவிரமாக இருந்த குருநாத் பெகுவின் காச நோய் ஜெபத்தின் மூலம் மட்டுப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** போராங் மற்றும் பிப்பல்குரி கிராமங்களில் சுவிசேஷத்திற்கு வாசல் திறக்கப்பட; மஞ்சள்காமாலையினால் பாதிக்கப்பட்டிருக்கும் சஞ்சீப் குடும்பம் மற்றும் ராஷ்மி பெகு குணமடைய; புதிய கிராமங்களில் ஆராதனை குழுக்கள் தொடங்க நாம் எடுக்கிற முயற்சிகள் வெற்றியடைய ஜெபிப்போம்.

## சத்தீஸ்கட்

### காட்கோரா:

**வால்வி தினா தானா & புசாரே ஷைலா சிந்தாமண்**

**துதிக்க:** புட்டிபக்னா, பன்வர், கேராமுடா கிராமங்களில் நடத்தப்பட்ட மூன்று நாட்கள் உபவாச ஜெபத்தில் சுமார் 250 விசுவாசிகள் கலந்துகொண்டு ஊக்கமாக ஜெபித்ததற்காக; புட்டிபக்னா கிராமத்தின் க்ளாட்வின் மாத்வேக்கு நடு இரவிலே ஐந்தாம் முறையாக வந்த இருதய அடைப்பு பிரச்சினையில் மருத்துவ மனைக்கு கொண்டுபோகிற நிலை இல்லாமலிருந்த போது விசுவாசிகள் கூடி ஜெபித்ததும் நல்ல சுகத்தை தேவன் தந்ததற்காக; குக்ரிபாரா கிராமத்தில் சிறுமி கிரண் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தினால் விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு அதிக எதிர்ப்பு தெரிவிக்கும் ஜட்கா கிராம தலைவர் கோபால் மனந்திரும்ப; புதிய விசுவாசி களான அமில்டியா மற்றும் பாலா விசுவாசத்தில் உறுதிப்பட; குளிர் காலத்தில் ஆஸ்துமாவினால் அவதியுறும் நமது ஊழியர் தினா தானாவுக்காக ஜெபிப்போம்.

## 16 நவம்பர்
### வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஆபிரகாம் தாமஸ்

### பத்தல்காவ்: பத்வி சோமாலியா & மஹாலா ஷீலாபேன்

**துதிக்க:** தில்டேகா கிராமத்தில் நடத்தப்பட்ட 3 நாட்கள் பெண்கள் முகாமில் 150 பேர் உற்சாகமாக கலந்துகொண்டதற்காக; பனாட்டாகர் மற்றும் அமரபள்ளி கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆலயக் கட்டுமானத்திற்காக; ஒவ்வொரு பேராலயத்தின் அருகிலேயும் ஊழியர்கள் தங்க வீடுகள் கட்டப்படவேண்டும் என்ற திட்டத்துடன் முதல் வீடு பத்தல்காவ் ஆலயம் அருகே கட்ட ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பல சூழ்நிலைகளினால் நிறுத்தப்பட்ட ஞாயிறு ஆராதனைகள் ஹிம்மத்பூர், ஓஹானா, கயா கிராமங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்பட; நமது புதிய தொடர்பாளர்களான நந்த்லால் மற்றும் ராம்சாய் குடும்பங்கள் இன்னும் கர்த்தரை அறிந்துகொள்ள; திட்டமிடப்பட்டுள்ள 3 நாட்கள் வாலிபர் முகாமின் எல்லாவித தேவைகளும் சந்திக்கப்பட்டு சிறப்பாக நடந்தேற ஜெபிப்போம்.

### சம்ப்பா:
### வினோத்குமார் சிங் & பிரவதிமணி

**துதிக்க:** பம்கார் மற்றும் மாக்ரி கிராம சபைகள் ஆவியிலும், விசுவாசிகளின் எண்ணிக்கையிலும் வளர்ந்து வருவதற்காக, ரோசாட்டா கிராம விசுவாசிகள் பிற கிராம மக்களை விசுவாசத்திற்குள்ளாக அழைத்துவர வேண்டி தினமும் ஜெபத்துடன் முயற்சியெடுத்துவருவதற்காக; 5 கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டு 125 புதிய ஏற்பாடுகள், 4 முழு வேதாகமங்கள் விநியோகிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆராதனை செய்ய சரியான இடமில்லாமல் தவிக்கும் பம்கார் சபைக்கு நல்ல விசாலமான இடம் அமையப்பெற; திருமணமாகி அநேக ஆண்டுகள் குழந்தையின்றி தவிக்கும் ப்ரமோத் – ஜோதி தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியத்தைத் தர; மனவியாதியினால் துன்புறும் நவீன், ஓம்பிரகாஷ் மற்றும் திருமதி. அக்னி போஷ்லேவுக்கு தேவன் முழு சுகம் தர ஜெபிப்போம்.

### கர்கோடா:
### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** ஊழியத்தில் உதவிவரும் தன்னார்வலர்களுக்கும் சபை மூப்பர்களுக்கும் வேதபாட விளக்க வகுப்புகள் நடைபெற்றன. எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசத்தில் உறுதியாக இருக்கும் லிப்ரா கிராம விசுவாசிகளுக்காக; ஊழியம் ஆரம்பித்து 9 வருடங்களான நிலையில் தேவன் கொடுத்த ஆத்துமாக்களுக்காக; சபைகளுக்காக சோட்டிகுடா கிராமத்தில் நன்றி ஏறெடுப்பு ஆராதனை நடைபெற்றது. அதில் உற்சாகமாக கலந்துகொண்ட திரளான விசுவாசிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராட்டியா, சௌகான் மக்கள் மத்தியில் நல்லதொரு புரிந்துணர்தல் ஏற்பட்டு திரளானவர்கள் இயேசுவின் பக்கம் வர; மூன்று குழந்தைகள் இறந்தே பிறந்த நிலையில் விசுவாசத்திற்குள் வந்து ஜெபம் செய்து வருகின்ற ஆசிஷ் சௌகானின் கர்ப்பமாக உள்ள மனைவி சுகமாக நல்ல ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க; ராட்டியா இன மக்களுக்காக நடைபெற உள்ள சிறப்பு சுகமளிக்கும் ஆராதனை நல்ல முறையில் நடைபெற ஜெபிப்போம்.

## 17 நவம்பர்
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஹேமலதா ஆபிரகாம்

### பாலி: டிட்டிங்பௌ & மலங்மெய் சனாலுங்

**துதிக்க:** சுரேலி கிராமத்தில் உபவாச ஜெபக்கூடுகையில் ஜெபநேரத்தில் சங்கீதா என்கிற பெண் சாத்தானின் தாக்குதலுக்குள்ளாகி அலைக்கழிக்கப்பட்டு விசுவாசிகளின் ஊக்கமான ஜெபத் திற்குப்பின் விடுதலை பெற்றதற்காக; மனோஹர்பூர், சன்வாரா மற்றும் துக்குபாத்ரா கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக; மூன்று நாட்கள் நடத்தப்பட்ட உபவாச கூடுகையில் உற்சாக மாக பங்குகொண்ட விசுவாசிகளுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பர்டி கிராம விசுவாசிகள் எதிர்ப்பின் மத்தியிலும் உறுதியாக நிற்க; துக்குபாத்ரா கிராமத்தில் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளத்தடையாக இருக்கும் குடிப்பழக்கம் நீங்க; நவாகாவ் கிராமத்தில் மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் சந்துபாய் குணமடைய ஜெபிப்போம்.

## ஒடிசா

### ரிமுலி: சங்கர் பி. & ஜெலின்

**துதிக்க:** பாட்டுபில்லா மற்றும் மட்டியால் சஹி கிராமங்களில் எல்லா திங்கட்கிழமை களிலும் கிரமமாக நடைபெற்றுவரும் வீட்டு ஆராதனைக் குழுக்களுக்காக; ஜும்புரா பகுதியில் வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றமைக்காக; நம் விசுவாசிகளின் பிள்ளைகள் சாம் சுந்தர், சத்யா முண்டா மற்றும் கோவர்தன் முண்டாவுக்கு கல்லூரியில் படிக்க இடம் கிடைத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நற்செய்திக்கு ஆர்வங்காட்டும் திர்சி முண்டா, பகோரதி முண்டா மற்றும் சத்யா முண்டா இயேசுவை ஏற்றுக்கொள்ள; நற்செய்திக்கு ஆர்வங்காட்டும் ஜமீர்தா கிராம மக்கள் திரளாய் கர்த்தரை ஏற்றுக்கொள்ள; நற்செய்தி பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ள குண்டப்பாடா, துல்சிபூர், சஹடா, சோர்தார், அர்ஜுன் வில்லா மற்றும் மனேஷ்பூர் கிராமங்களில் இரவு கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

## இன்றைக்கும் காணப்படுகின்ற லேகியோன்கள்!

*குஜராத் மாநிலம் கெர்காம் பணித்தளத்தின் ஒரு கிராமத்தில் சகோ. வசந்த் என்கிற 55 வயது நபர் பிசாசின் ஆளுகைக்குட்பட்டு வீட்டில் தங்காமல் காடு, மலைகளில் சுற்றித் திரிந்து வந்திருக்கிறார். செத்துப்போ... என்கிற சத்தம் அவருடைய காதில் ஒலித்துக்கொண்டே இருந்தபடியினால் அடிக்கடி மரணத்தைத் தழுவ முயற்சி செய்திருக்கிறார். அவருடைய வீட்டார் அவரைக் கண்டுபிடித்து வீட்டுக்கு அழைத்து வந்தாலும் மறுநாளிலே வீட்டைவிட்டுக் காட்டுக்கு ஓடிவிடுவார். இவருக்காக அவர் குடும்பத்தினர் நமது ஆலயத்திற்கு வந்து ஜெபிக்க ஆரம்பித்து இருக்கிறார்கள். நமது விசுவாசிகளும் உபவாசத்துடன் ஜெபிக்கவே ஒரு நாள் தற்செயலாக வீட்டுக்கு வந்தவரை ஆலயத்திற்கு கூட்டிவந்து ஜெபத்திலே கலந்துகொள்ள வைத்துள்ளார்கள். அந்த நாள் அவருடைய வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவரை மிரட்டிக்கொண்டிருந்த சத்தம் வெளியேறிப் போனதை உணர்ந்தார். மனதிலே ஒரு அமைதி, சமாதானம் வந்து நிரம்பினது. முற்றிலும் புது மனிதரானார். தற்போது முழுக் குடும்பமும் இயேசுவின் அடியவர்களாக மாறியுள்ளனர். லேகியோனை விரட்டி திரு. வசந்த்தை சுகமாக்கிய கர்த்தர் இன்னும் அதேவித அற்புதம் செய்ய வல்லவராக இருக்கிறார். அல்லேலூயா!*

## 18 நவம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜாக்குலீன் பெஞ்சமின்
திரு. திசாங்சே சங்தம்

### கியோன்ஜர்:
**பிரத்யூஷ் நாயக் & மரிதாய் லியோனா**

**துதிக்க:** நவ்காவ் கிராமத்தின் இந்துபூர்த்தி தீய ஆவியினால் அலைக்கழிக்கப்பட்டு 3 நாட்களாக தூங்காமல் சாப்பிடாமலிருந்த நிலையில் பாலிசாஹி கிராமத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நம்முடைய விசுவாசிகளின் உபவாச ஜெபத்திற்கு தூக்கி வரப்பட்டார். நம் விசுவாசிகள் கூடி ஊக்கமாக ஜெபித்த போது தேவன் கொடுத்த உடனடி விடுதலைக்காக; புல்ஜிஹார் மற்றும் பஹாகடா கிராமங்களில் புதிதாக நான்கு குடும்பங்கள் விசுவாசத்திற்குள் வந்துள்ளதற்காக; 16 வயது இளம் வாலிபன் மனோஜ் முண்டா கட்டு விரியன் பாம்பால் கடிபட்டு வாந்தி எடுத்து கை கால் வீங்கி சுயநினைவின்றி கொய்டா மருத்துவமனைக்கும் பின்னர் ரூர்கேலா மருத்துவமனைக்கும் எடுத்துச் செல்லப் பட்ட நிலையில் கிராமத்தில் விசுவாசிகள் ஜெபித்துக் கொண்டிருந்தனர். தேவன் அற்புதமாக கொடுத்த சுகத்திற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மின்சாரம் தாக்கினதினால் நெஞ்சுப்பகுதியில் காயம் ஏற்பட்டு சிகிச்சை எடுத்துவரும் பங்காருசன்னி கிராம சபை மூப்பர் லதுரா முண்டா விரைவில் குணமடைய; ஜவாங்கா இன மக்கள் மத்தியில் நற்செய்திக்கு திறந்த வாசல் கிடைக்கவும்; விசுவாசிகள் எழும்பவும்; மூளையில் நரம்பு பாதித்ததினால் சுகவீனமாயிருக்கும் நவாகாவ் கிராமத்தின் சாத்ராக் காண்டியனின் 1 வயது மகன் மற்றும் மாமா முண்டா சுகமடைய; 3 வருடங்களாக தீய ஆவியின் தாக்கு தலுக்கு ஆளாகியிருக்கும் மோகன் முண்டா, ராபிபரி முண்டா, மற்றும் நகோமி முண்டா விடுதலை பெற ஜெபிப்போம்.

### டேங்கானல்:
**அசோக் நாயக் & சுரபி**

**துதிக்க:** 34 நபர்கள் இந்த மாதம் இயேசுவே ஆண்டவர் என்று அறிக்கைச் செய்தனர். சுகந்தி முண்டாவும், அருண் புர்டியும் தீய ஆவியினால் அலைக் கழிக்கப்பட்டு பல இடங்களுக்குச் சென்று குணமாகாத நிலையில் விசுவாசிகளின் ஜெபம் நடைபெற்றுக்கொண்டிருந்த குடோஹடியா கிராமத்திற்குக் கூட்டி வந்தனர். விசுவாசிகள் கூடி ஜெபித்த போது அசுத்த ஆவியின் பிடியிலிருந்து இருவரும் விடுதலை பெற்றமைக்காக; பித்தால்துவா கிராமத்தில் ஜினா டுர்யா, ஜெயா டுர்யா இருவரும் நடக்க முடியாமல் இருந்த பெலவீனத்திலிருந்து ஜெபத்தின் மூலமாக சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில்கி சோரேன், ஸ்ரீமதி சோரேன் மற்றும் மோகந்தி குன்கல் பக்கவாத பாதிப்பிலிருந்து சுகம்பெற; ஜான்டுகா ஷோ மனநோயிலிருந்தும், பிஸ்வால் சிறுநீரக கோளாறிலிருந்தும் சுகம்பெற; ஜெய்தாம்டார்பூர் ஆலயக்கட்டுமானப் பணிகள் விரைவில் தடையின்றி நிறைவுப் பெற ஜெபிப்போம்.

## 19 நவம்பர்
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. எலிசபெத் சொர்ணா துரைராஜ்
திருமதி. பசந்தி பாசுதேவ் மால்தோ

### ராய்ரங்பூர்: குணா சந்திர பாய்க் & கிருட்டாஞ்சலி பாய்க்

**துதிக்க:** டங்காபாணி, லஷ்மிபோசி கிராமங்களில் நடத்தப்பட்ட ஒருநாள் உபவாசக் கூடுகையில் திரளாக விசுவாசிகள் உற்சாகத்தோடுக் கலந்துகொண்டதற்காக; லஹசிலா கிராமத்திலே நடத்தப்பட்ட 2 நாட்கள் வாலிபர் கூடுகையில் அனைத்து சபைகளிலிருந்தும் வாலிபர்கள் உற்சாக மாகப் பங்குப் பெற்றதற்காக; சுலய்பட்டு டேம், பக்பாட்டேம் ஆகிய கிராமங்களில் வெளிப்புற கூட்டங்கள் நடத்தி நற்செய்தி அறிவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுகிறிஸ்துவை இரட்சகராக அறிக்கையிடத் தயாராக உள்ள 17 நபர்கள் மேலும் விசுவாசத்தில் வளரவும், தடைகள் யாவும் நீங்கவும், கோபிநாத்பூர், டங்காபானி கிராமங்களில் நடந்துக் கொண்டிருக்கும் முதியோர் எழுத்தறிவித்தல் வகுப்புகள் சிறப்பாக நடக்கவும் அநேக கிராம மக்கள் பயன்பெறவும்; டங்காபானி கிராம ஆலயக்கட்டுமானப்பணிகள் விரைவில் முடிவடைந்து தேவ நாம மகிமைக்கென அர்ப்பணிப்புச் செய்யப்பட ஜெபிப்போம்.

## குஜராத்

### உமர்காம்: ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா

**துதிக்க:** தஹர்பாடா, போரவ் மற்றும் பாண்ட்ஸா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார். போரவ் கிராமத்தில் நீண்டநாட்களாக கால் வீக்கத்தினால் நடக்க முடியாமலிருந்த லக்குபாய் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்து ஜெபம் செய்ததின் விளைவாக நடக்க ஆரம்பித்துள்ளார். பிராந்திய சபைகள் கூட்டமைப்பின் கூடுகை சிறப்பாக நடைபெறவும், திருச்சபைகளின் வளர்ச்சிக் காகத் தீர்மானங்கள் எடுக்கப்படவும் கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுபட்பாடா, கூடர் மற்றும் தஹிர் பாடாவில் இரவுக் கூட்டங்கள் ஆரம்பிக்கப்பட; சக்கல்வாடா, மாண்டா மற்றும் காண்ட்வாய் கிராமங்களில் தொடங்கப்பட்டுள்ள வீட்டு ஆராதனைக் குழுக்கள் சிறப்பாக நடைபெற; போர்மால், சராய்பாடா கிராமங்களில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள வெளிப்புற சுவிசேஷக் கூட்டங்கள் சிறப்பாக எந்தத் தடையு மில்லாமல் நடந்தேற ஜெபிப்போம்.

### முடியாததையும் முடியவைக்கும் கிறிஸ்து!

*குஜராத் மாநிலம் போடேலி பணித்தளத்தில் தன்னார்வ ஊழியராகப் பணியாற்றி வருபவர் கம்தியாபாய். ஆகஸ்ட் மாதம் அவரை கொடிய விஷமுள்ள கட்டுவிரியன் தீண்டினதால் சுயநினைவின்றி அருகிலுள்ள அரசாங்க மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். ஆனாலும் உடல் நிலை நாளுக்குநாள் மோசமாகிக் கொண்டிருந்தது. நமது விசுவாசிகள் ஆலயத்தில் கூடி தொடர்ந்து ஜெபித்துவரும் தருவாயில் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்பட்டார். என்ன செய்வது என்று தெரியாத நிலையில் அனைத்து விசுவாசிகளும் கூடி ஜெபித்து பரோடா நகரின் அரசாங்கத்தின் பெரிய மருத்துவ மனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் இறந்த உடல் மீண்டும் உயிர் பெற்றிருக்கிறது என்று ஆச்சரியப்பட்டு சிகிச்சைக்கு அனுமதித்தனர். அவரது உடல் நலம் தேறி வருகிறது. தேவனுக்கே மகிமை!*

## 20 நவம்பர் திங்கள்

### பாவ்நகர்:
### அகிலேஷ் குமார் & கிரண்தேவி

**துதிக்க:** சுனகாவ், பார்வாடி கிராமங்களில் நற்செய்தி முதன்முறையாக எடுத் துரைக்கப்பட்டது. நீண்ட நாட்களாக அசுத்த ஆவியின் பிடியினால் அவதிப்பட்டுவந்த நிலேஷ்பாய் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற்றார். சுமித்பாய் தன்னுடைய சுகவீனத்தில் மருந்துகள் எடுக்காமல் விசுவாச ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று சாட்சிப் பகர்ந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இரண்டு முறை குழந்தைப் பிறந்து இறந்த நிலையில் அஞ்சலிபேன் விசுவாசத்திற்குள் வந்து ஜெபித்தபோது மீண்டும் கர்ப்பமாகியுள்ளார். புதிய விசுவாசி பூஜாபேனின் காதிலிருந்து வந்துகொண்டிருக்கும் இரத்தம் நின்று சுகம் பெற; ஜவஹீர்பாய் அசுத்த ஆவி தாக்குதலின் போது தன் மனைவியையும் குழந்தைகளையும் அதிகமாக அடிக்கிறதி லிருந்து விடுபட ஜெபிப்போம்.

### மெஹசானா:
### சம்புநாத் நாயக் & ராஜேஸ்வரி

**துதிக்க:** பாலன்பூர் பகுதிகளில் நற்செய்தி பகிரபட்டு அதின் மூலமாக சில புதிய தொடர்பாளர்கள் வந்துள்ளனர். டபாடியா ரோட் கிராமத்தில் சிறுவர்களை கூட்டிணைத்து கதைகள், பாடல்கள் மூலமாக இயேசு கிறிஸ்துவின் அன்பின் செய்தி எடுத்துரைக்கப்பட்டது. பலவசானா மற்றும் புடேடா கிராமங்களில் எந்தத் தடையுமின்றி இரவுக் கூட்டங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சதாராம்பாய் மற்றும் அவரது குடும்பத்தின் கிறிஸ்தவ விசுவாச ஈடுபாட்டின் மூலம் அவரது உறவினர்கள் விசுவாசத்திற்குள் வர; மூட்டு வலியினால் நடக்கச் சிரமப்படும் பச்சுபாயின் மனைவி சுகம் பெற; புதிய தொடர்பாளர்களான ரமேஷ்பாய், சௌவவ்பாய் விசுவாசத்தில் வளர ஜெபிப்போம்.

### போடேலி: ஏசுபாபு & உஷா

**துதிக்க:** நீண்ட நாட்களாக சுகவீனத்தால் படுத்தப்படுக்கையாக இருந்த ஆகாஷ்பாய் ஜெபத்தின் மூலம் சுகம்பெற்று நடக்க ஆரம்பித்துள்ளார். குஜராத் திருமண்டலம் நமது ஊழியருக்கு டீக்கன் அபிஷேகப் பட்டம் வழங்கியுள்ளது. படுக்கையில் படுத்திருந்த முர்ஜிபாயின் மீது கூரையின் மேலிருந்து பாம்பு விழுந்தபோதும் தீண்டாமல் கர்த்தர் பாதுகாத்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தாபாய் மற்றும் கார்னெட் கிராமங்களில் விசுவாசிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்துவரும் மெல்சிங்பாய், பார்சிங்பாய், சப்கிபாய், வர்தன்பாய் ஆகியோர் மனந்திரும்ப; எதிர்ப்பின் காரணமாக விசுவாசத்திலிருந்து பின் மாற்றம் அடைந்துள்ள கார்னெட் கிராம லஷ்மன்பாய் குடும்பம் சின்னிபேன் குடும்பம் விசுவாசத்திற்குள் திரும்ப; பிசாட் கிராமத்தில் விரைவில் ஆராதனை துவங்கப்பட நல்ல சூழ்நிலை நிலவ ஜெபிப்போம்.

## 21 நவம்பர்
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெஹாலின் ஜெமி ஜெயசேகர்

திருமதி. மன்பிரீத் கௌர் அய்யனார்

### அஹ்வா:
### விக்னேஷ்வரன் & ஏஞ்சலின் எம்.

**துதிக்க:** ஏழு கிராமங்களில் நடைபெற்ற ஆராதனையில் 143 பேர் இயேசுவின் அடியவராகத் தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். வாசூர்னியா கிராமத்தில் நடைபெற்ற 3 நாட்கள் உபவாச ஜெபத்தில் திரளான விசுவாசிகள் உற்சாகத்தோடு பங்கு கொண்டதற்காக; ஒரு வாரம் சூர்யபர்டா கிராமத்தில் நடைபெற்ற சங்கிலித்தொடர் ஜெபத்தில் தினமும் ஒவ்வொரு சபையின் மூப்பர் தங்கள் சபையின் விசுவாசிகளோடு உற்சாகமாக பங்குபெற்றமைக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுகவீனத்தினால் கஷ்டப்படும் பின்வரும் நபர்களுக்காக ஜெபிப்போம். டாங்கடி கிராம லலிதா 13 வருடம் தீராத வயிற்றுவலி; சுன்தா கிராம சுனிதாபேன் இரவில் காதில் அதிக இரைச்சல் வருவதினால் அநேக மாதங்களாக தூங்க முடியவில்லை; சின்ஞ்பாடா கிராமத்தில் 4 வயது சிறுவன் அதுல் நடக்க முடியாமல் கஷ்டப்படுகிறான்; கடம்பா கிராமத்தின் 2 வயது சிறுமி இன்னும் எழுந்து நிற்க முடியாத நிலையிலிருந்து சுகம் பெற்று நடக்க ஊக்கமாக ஜெபிப்போம்.

### கொர்காம்: குமரன் ஜி .&
### ஜெலின் ஜெய பிரதா

**துதிக்க:** 17 நபர்கள் இயேசுவே தெய்வம் என்று விசுவாச அறிக்கையிட்டதற்காக; சாந்தாபாயின் மகன் தொடர்ந்த வாந்தியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த நிலையில், மருந்துகள் ஒன்றும் வேலை செய்யாத நிலையில், சாப்பிட்டது உடனே வாந்தியாக வெளிவந்துகொண்டிருந்த நிலையில் ஜெபத்தின் மூலம் வாந்தி நின்றதற்காக; பாவன்பாய் இருச்சர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது காளைமாடு மோதி கீழே விழுந்தாலும் அதிகக் காயம் ஏற்படாமல் தேவன் காத்துக்கொண்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிறுநீரகம் பாதிக்கப்பட்டு உடல் வீங்கி துன்புறுகிற சஞ்சீவ் என்கிற 7 வயது சிறுவனின் சுகத்திற்காக; வெளிநாடு சென்று 7 வருடங்கள் ஆகியும் ஊர் திரும்பாமல் இருக்கும் முகேஷ் நல்ல தகவல் தெரிவிக்க; கபலிபேன் பக்கவாதத்திலிருந்தும், ஹன்சாபேன் அடிக்கடி வரும் மயக்கத்திலிருந்தும் சுகம்பெற ஜெபிப்போம்.

### விஜயநகர்:
### விஜய் குமார் கே. & சுஷீலா

**துதிக்க:** 23 நபர்கள் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டனர். விசுவாச வாலிபன் சுமித் ஜெபத்துடன் நான்காவது முறையாக பரீட்சை எழுதி மத்திய போலீஸ் படைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக; பொய் வழக்கில் சிக்கவைக்கப்பட்டிருந்த சம்பல்பாய் காவல் துறையினரால் விடுவிக்கப்பட்டதற்காக; துர்ஜன்பாய்-கமலா தம்பதியினர் அடிக்கடி அசுத்த ஆவியின் தாக்குதலுக்குள்ளாகி பிறகு ஆலயம் வந்து ஜெபித்ததினால் பிசாசின் உபத்திரவம் நீங்கினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிய தொடர்பாளர்களான விஜய்பாய், ஹல்கிபேன், ஈஸ்வர்பாய் மற்றும் சீதாபேன் இன்னும் தேவனைப்பற்றி அறிந்து மந்தையில் சேர; அதிக மாதவிடாய் காரணமாக அவதியுறும் பபிதாபேன் மற்றும் நீலாபேன் சுகம்பெற; கந்தாபேன் ஆலயம் வர தடுக்கும் அவரது கணவர் லக்சுமன்பாய் மனந்திரும்பி ஆலயம் வர ஜெபிப்போம்.

**22 நவம்பர்**
**புதன்**
*உபவாச ஜெபநாள்*

## தடுகாவ்:

**கரோடா பிஸ்வா ரஞ்சன் & பிரபினா ராணி**

**துதிக்க:** நாயக்கா இன மக்களை நற்செய்தியுடன் சந்திக்க தேவன் கொடுத்த நல் வாய்ப்புக்காக, புற மதத்தின் கதையை ஊர் ஊராக போய் சொல்லுகின்ற ஒரு நபரை அடபோடரா கிராமத்தில் சந்தித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி அவருக்குச் சொல்ல தேவன் கிருபை செய்ததற்காக, நற்செய்திக்கு கதவடைத்த நானாபூர் கிராமத்தில் தற்போது கிடைத்துள்ள திறந்த வாசலுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விஷ்ணு என்கிற அட்போட்ரா கிராமத்தைச் சேர்ந்த நபர் புற்றுநோயின் தாக்கத்தினால் தண்ணீர் கூட குடிக்க முடியாமல் கஷ்டப்பட்டு தன் மரணத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். மரணத் திற்கு முன் தன் பெண் பிள்ளைகளின் திருமணத்தை முடிக்க எண்ணி அதின் காரியங்களைச் செய்துகொண்டிருந்தார். அவரைச் சந்தித்து இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறிவித்து ஜெபித்து வரவே தற்போது அவர் தண்ணீர் குடிப்பது மட்டு மன்றி சாப்பிடவும் செய்கிறார். இயேசு வின் மீது விஷ்ணு குடும்பம் விசுவாசம் வைத்து ஜெபிக்கிறது. அவருடைய பூரண சுகத்திற்காக; அமோட்ரா, நானாபூர், அட்போட்ரா, ஹரிபூரா, துன்தர் கிராமங்களில் விரைவில் இரவுக் கூட்டங்கள் தொடங்கப்பட ஜெபிப்போம்.

## ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி:

**ஹரிபாபு & பங்கஜம், பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா, சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி, பிஜூலால் & ஸ்டெஃபி, டேனியல் ராஜாமணி & சோஃபியா, ரூத், மய்னா மற்றும் ஆல்பர்ட் சந்தோஷ் ராஜ்**

**துதிக்க:** குளிர் காலத்தில் சிறுவர்கள் குளிக்க சூரியஒளியால் தண்ணீரை சூடுபடுத்தும் சாதனம் நிறுவப்பட்டு சிறப்பாக வேலை செய்கிறதற்காக; இந்திய சுவிசேஷ மாணவர் ஒன்றியம் மூலமாகச் சிறுவர்களுக்கு ஒரு நாள் சிறப்புக் கூட்டம் நடத்தப்பட்டதற்காக; தேர்வில் அனைத்து சிறுவர்களும் நல்ல மதிப்பெண்கள் வாங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வருகின்ற தீபாவளி விடுமுறையில் சிறுவர்களுக்கு நடத்த திட்டமிடப்பட்டிருக்கும் விடுமுறை வேதாகமப் பள்ளி சிறப்பாக நடைபெற; 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு அரசாங்க தேர்வு எழுதப்போகும் மாணவர்களின் உடல்நிலை மற்றும் படிக்கும் திறனுக்காக; சுகவீனத்தினிமித்தம் தங்கள் வீடுகளுக்குச் சென்றுள்ள சிறுவர்களுக்காக ஜெபிப்போம்.

**23 நவம்பர்**
**வியாழன்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஜாஷ்வா K.S.

திரு. ஜாண்பால் ஹாரிஸ் J.

# தாத்ரா & நகர் ஹவேலி

### ராண்தா விடுதி:

**மர்குஸ் மால்தோ & சாரா; சந்திரிகாபேன், மனிஷா லக்ரா, ஏஞ்சல் ராஜ்**

**துதிக்க:** இந்த மழைக்காலத்தில் நமது விடுதியின் சிறுவர்கள் வியாதி களிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். நீண்ட நாட்களாக சரீரப் புண்களால் அவதியுற்றுவந்த இஸ்மத்பாய், மனேஷ்பாய், ஜிக்னேஷ் பாய் எண்ணெய் பூசி ஜெபித்ததின் விளைவாக சுகம்பெற்றனர். டெங்கு காய்ச்சலினால் படுத்தப்படுக்கையாக இருந்த சங்கிட்பாய் விசுவாசிகள் கூடி ஜெபித்ததின் காரணத்தினால் இரத்த அணுக்கள் சரியாகி பூரண குணமடைந்த தற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பத்தாவது வகுப்பு தேர்வு எழுதப்போகும் ரோஷன்பாய் மற்றும் நித்தின்பாய் உடல் பலவீனத்திலிருந்து சுகமடைந்து நன்றாக தேர்வு எழுத; புதிதாக விடுதியில் சேர்க்கப்பட்ட சிறுவர்கள் வீட்டு நினைப்பின்றி படிப்பிலே கவனம் செலுத்தி விடுதியின் சட்டத் திட்டங்களை புரிந்துக்கொண்டு நடக்க; விடுதி மாணவர்களின் பெற்றோர் தங்கள் தங்கள் ஊர் சபை நடவடிக்கைகளில் உற்சாகமாகப் பங்குபெற ஜெபிப்போம்.

### சில்வாசா:

**டேவிட்சன் ராஜாசிங் & கண்மணி பரிமளம்**

**துதிக்க:** கட்டிடத் தொழியாளியான அம்ரூத்பாய் வேலைச் செய்துக் கொண்டிருந்த பொழுது கான்கிரீட் சிலாப் இடிந்து அவர் மீது விழுந்தபோதும் காயமின்றி தப்பினதற்காக; வைசாலி பேன் ஜெயேஷ்பாய் தம்பதியினருக்கு திருமணமாகி 5 வருடங்கள் கழித்து தேவன் கொடுத்துள்ள மகப்பேறுக்காக; 5 பேர் கிறிஸ்துவின் மீதுள்ள தங்களது விசுவாசத்தை வெளிப்படையாக அறிவித்து தேவ சபையில் சேர்ந்தமைக் காக; 10 சபையின் வாலிபர்கள் மற்றும் இளம் வாலிபர்களுக்காக நடத்தப்பட்ட கூடுகையில் திரளான வாலிபர்கள் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றதற்காக கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பணித்தளத்திலே அநேக சிறு, குறுந்தொழிற்சாலைகள் உள்ளதால் அங்குப் பணிக்குச் செல்லும் நமது விசுவாசிகளில் அநேகம் பேர் டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விரைவில் சுகம்பெற; சுகவீனத்தால் நடக்கவும் பேசவும் பெலனற்று இருக்கின்ற கசர்பாரி கிராம ஜெசிபேன் குணமடைய; கான்வெல் கிராம சந்தோஷ்பாய் தன் மூச்சு திணறலிலிருந்து குணமடைய ஜெபிப்போம்.

**24 நவம்பர் வெள்ளி**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. பியூலா செல்வி ஹென்றி
திருமதி. கிரண் பெங்ரா லவ்லின்

# மகாராஷ்டிரா

## ஜவஹர்:

### ஸ்ரீனிவாச ராவ் & ராஜ்யலட்சுமி

**துதிக்க:** சிங்கலிச்மால் மற்றும் லோகர்மால் கிராமங்களில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற்றது. பைரிபாடா கிராமத்தில் வெளிப்புற நற்செய்தி கூட்டம் நடைபெற்றது. அநேக மக்கள் நற்செய்தியினை கேள்விப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நெஞ்சிலே நீர்கட்டிக்கொண்டு அதின் பக்கவிளைவுகளாக இரத்த அழுத்தம் மற்றும் காய்ச்சல் வந்து மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கும் 7 வயது ரித்தேஷ் ரமண் சுகம்பெற; ப்ரித்தல் மற்றும் அவரது மகள் ப்ரியான்சி வைரல் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஜவஹர் பணித்தளத்தின் சபைகளின் மூப்பர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்கள் சபைகளை ஆவிக்குரிய வழியில் நடத்த ஜெபிப்போம்.

## இகத்புரி:

### நாகராஜன் & திலகவதி

**துதிக்க:** வகர்பாடா, கைராளி மற்றும் விகிபாடா கிராமங்களில் நடத்தப்பட்ட ஒரு நாள் உபவாசக் கூடுகையில் திரளாகப் பங்குபெற்ற விசுவாசிகள் மற்றும் கிராம மக்களின் உற்சாகத்திற்காக; மோராம்பி கிராமத்தின் நுவா நிமோனியாவிலிருந்தும், விகிபாடா கிராமத்தின் தோய் நீண்ட நாட்களாக இருந்துவந்த மூச்சு திணறலிலிருந்தும் சுகம்பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** முக்னே கிராமத்தில் புதிதாக வீட்டு ஆராதனைக் கூட்டம் தொடங்கப்பட; நடக்க முடியாமல் அவதியுறும் தமணி கிராமத்தின் பாபாபேன் சுகம்பெற; சிறுநீரகப் பாதிப்பால் கஷ்டப்படுகின்ற விகிகாவ் கிராமத்தின் ஜான்குபேன் சுகம் பெற ஜெபிப்போம்.

## தலாசரி:

### மயில்சாமி ஜோசப் & ஏசுமணி

**துதிக்க:** வேல்காவ் கிராமத்தின் சங்கீதா என்கிற இளம்பெண் ஆலயத்திற்கு உறவினர்கள் மூலமாக அழைத்துவரப்பட்டு விசுவாசிகள் கூடி ஜெபித்தபோது நீண்ட நாட்களாக இருந்துவந்த தீய ஆவியின் தொந்தரவிலிருந்து குணமடைந்ததற்காக; ஓசர்விரா கிராமத்தில் நடத்தப்பட்ட 2 நாட்கள் ஆவிக்குரிய முகாமில் கலந்துகொண்ட 27 சபை மூப்பர்களுக்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சில்லர் கிராமத்தில் கட்டப்பட விருக்கும் தற்காலிக ஆலயத்தின் வேலைகள் எந்தவித எதிர்ப்புமின்றி நடைபெற்று முடிய; நமது விசுவாசி குடும்பத்தின் சிறப்பு குழந்தையாக இருக்கின்ற 10 வயது மகன் ஆரியனுக்கு நடக்கவிருக்கின்ற அறுவைசிகிச்சை வெற்றிகரமாகச் செய்யப்பட்டு சிறுவன் பூரண குணமடைய; சைவான் கிராமத்தில் இயேசுவின் மீது விசுவாசம் வைத்து ஆலயம் வரும் பிரகாஷ் வலிப்பு நோயிலிருந்து முற்றிலும் குணமடைய ஜெபிப்போம்.

# 25 நவம்பர்
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. மிரிலா சம்பிரமரி
திரு. டெப்ரட்டோ பிஸ்வாஸ்
செல்வி. வசாவா அருணாபேன் டாமனியாபாய்

## கட்சாந்தூர்:
**பால் ஆல்பர்ட் & ராணி ஜெஸிலெட்**

**துதிக்க:** 6 நபர்கள் இயேசுவே தெய்வம் என்று அறிக்கையிட்டுள்ளனர். 292 நபர்களுக்கு நற்செய்தி அறிவிக்கப்பட்டு 165 பேர்களுக்கு நற்செய்தி பிரதிகள் வழங்கப்பட்டுள்ளதற்காக; மாண்ட்வா கிராமத்தில் பின்வாங்கிச் சென்றிருந்த சில விசுவாசிகள் மீண்டும் இயேசுவை அண்டிக்கொள்ள வந்துள்ளதற்காக; அதிக சுகவீனத்தினால் பெலனற்றுப் போயிருந்த விசுவாசி சுனந்தா ஜெபத்தின் மூலம் நல்ல குணமடைந்து வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிங்கல்தீப் ஆலயத்தில் பிரச்சினைச் செய்து இரு பிரிவை உண்டாக்கிய நபர்களை தேவன் சந்திக்கவும், சபை மீண்டும் ஒற்றுமையுடன் செயல்படவும், நற்செய்திக்கு செவிசாய்க்கும் கலாம் மற்றும் கோண்ட் இன மக்கள் சமுதாயக் கட்டுபாடுகளினால் பயந்து இயேசுவை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றனர். இந்தச் சமூக தலைவர்களை தேவன் சந்திக்க; உமேஷ்டெக்கம், ஸ்ரீகாந்த், சந்தோஷ் கதம், ஏசுபாபு குடும்பங்களில் தேவன் குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட ஜெபிப்போம்.

## மொல்கி / நர்மதா:
**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** பட்டில்பாடா கிராமத்தைச் சேர்ந்த லதா பக்தசிங் அநேக மாதங்கள் தூக்கமின்மையால் அவதியுற்றுப் பல இடங்களுக்குச் சென்று வைத்தியம் செய்தும் குணமாகாத நிலையில் ஆலயத்திற்கு வந்து ஜெபிக்க துவங்கினபோது தேவன் அற்புத விடுதலையளித்தார். தற்போது குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொண்டுள்ளதற்காக; 5 இடங்களில் ஒரு நாள் உபவாசக்கூட்டம் நடத்தப்பட்டு அதில் விசுவாசிகள் உற்சாகமாக பங்குபெற்றதற்காக; ஒல்பாடா மற்றும் டபர்மால் சபைகள் மீண்டும் நம்முடன் இணைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஊழியத்திற்கு மிகுந்த இடைஞ்சல் தரும் முன்னா மற்றும் ராய்சிங் மனம்மாற, பாக்கூர்கண்ட் ஆலயக்கட்டுமானப் பணிகள் தடையின்றி நடைபெற; நற்செய்திக்கு ஆர்வங்காட்டும் மண்டாம்பா கிராமத்தின் ஜோலுபாய், குலாப்பாய் இயேசுவை ஏற்றுக்கொள்ள; தன்னார்வ ஊழியர் நர்சிங்பாய் காச நோயின் தாக்கத்தினின்று விடுதலையாக ஜெபிப்போம்.

## *சாவுக்கேதுவான ஒன்றும் சேதப்படுத்தாது!*

*கர்நாடக மாநிலம், ரவனையாப்பள்ளி கிராம விசுவாசி கலாம்மா வெளியிலிருந்து சோர்வாக வந்து வீட்டில் செம்பிலிருந்த தண்ணீரைத் தாகம் மிகுதியால் குடித்துவிட்டார். குடித்து முடித்தபிறகு செம்பின் அடிப்பாகத்தில் செத்துப்போன பல்லி இருப்பதைப் பார்த்தார். கொஞ்சமும் கலக்கமின்றி ஜெபித்ததின் விளைவாக எந்தவொரு விஷத்தின் பாதிப்புமின்றி கர்த்தரால் பாதுகாக்கப்பட்டார்.*

## 26 நவம்பர்
### ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. மனாசே டேனியல்

### வத்ஃபாலி:

**பிதுயூத் குமார் சிங்**

**துதிக்க:** நீண்ட வருடங்களாக வலிப்பு நோயினால் பாதிக்கப்பட்டு எந்தவொரு வேலையும் செய்ய இயலாமல் இருந்த பீம்சிங் அநேக இடங்களுக்குச் சென்று முடியாத நிலையில் ஆலயம் வந்து ஜெபிக்க ஆரம்பித்தபோது தேவன் கொடுத்த சுகத்திற்காக; பூர்பாபாய் வயிற்றில் கட்டியினால் அவதியுற்று மருத்துவர்கள் அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரைத்த நேரத்தில் உபவாசமிருந்து ஜெபித்ததினால் கட்டி மறைந்ததற்காக; 20 நாட்களாக மருந்து உட்கொண்டு தொடர்ந்து கடும் காய்ச்சலினால் அவதியுற்ற ராஹத் என்ற சிறுவனுக்கு ஜெபித்ததின் மூலம் தேவன் கொடுத்த சுகத்திற்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** இயேசுவே தெய்வம் என்று அறிக்கைச் செய்யத் தயாராக இருந்த மக்களை குழப்பி அவர்களைத் தடுத்த நபர்களுக்காகவும், குழம்பிபோய் இருக்கின்றவர்கள் இன்னும் விசுவாசத்தில் வளர; வத்ஃபாலி பணித்தளத்தின் சபை மூப்பர்கள் உற்சாகத்துடன் சபை மக்களை வழிநடத்தி சபை வளர்ச்சிக்கு வித்திட ஜெபிப்போம்.

### கப்ராடா:

**பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா**

**துதிக்க:** வாடி மற்றும் தாம்படுமால் கிராமங்களில் நடைபெற்ற இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் கூட்டத்தில் 70 நபர்கள் ஏற்றுக்கொண்டார்கள். திருமணமாகி 10 வருடங்களுக்குப் பிறகு தம்படுமால் கிராமத்தின் அங்கிதாபேன் குழந்தை பேறு அடைந்தார். கடந்த 4 வருடங்களாகப் பேச முடியாமல் தீய ஆவியினால் கட்டப்பட்டிருந்த தேவர் பாடாவின் திவ்வேஷ்பாய் ஜெபத்தின் மூலம் வாயின் கட்டு அவிழ்க்கப்பட்டு பேச ஆரம்பித்தார். பெண்களுக்கான சிறப்பு கூடுகையில் சந்வெகன் கிராமத்தில் அநேக பெண்கள் உற்சாகமாக கலந்து கொண்டதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கவிருக்கும் சபை மூப்பர்கள் பயிற்சி முகாம் சிறப்பாக நடைபெறவும், மூப்பர்கள் ஆத்தும ஆதாயம் செய்ய ஊக்கப்படுத்தபடவும்; சிர்னி ஆலய சுற்றுச்சுவர் வேலை சீக்கிரம் முடிவடைய; புல்காலி மற்றும் ராஜ்குமார் ஆகியோரின் கண்பார்வை சரியாகவும், சுமனின் தீராத தலைவலி குணமாகவும் ஜெபிப்போம்.

### அக்கல்குவா:

**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** மூன்று நபர்கள் இயேசு கிறிஸ்துவின் சீஷர்களாயினர். முக்கடி கிராமத்தில் இரவு கூட்டம் புதிதாக துவங்கப்பட தேவன் கிருபை செய்தார். 2 குடும்பங்கள் புதிதாக விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். அநேகம் பேர் பங்குகொண்ட பெண்கள் கூடுகை சிறப்பாக நடைபெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொடிய எச்.ஐ.வி. வியாதியினால் பாதிக்கப்பட்டு நடக்கக்கூட இயலாமலிருக்கும் சர்மிளாபேன் குணமடைய; வேலைக்காக வெளி இடங்களுக்குச் சென்றுள்ள நம் விசுவாசிகள் சாத்தானின் வலைக்குள் விழுந்துவிடாமல் விசுவாசத்தில் உறுதியாக நிற்க ஜெபிப்போம்.

## 27 நவம்பர் திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லிங்டின்கிம் ஹயோகிப் லுன்கிம்

# கர்நாடகா

### முன்ட்கோட்:

**சுனில் குமார் & தேகம் சங்கீதா லாலு**

**துதிக்க:** எல்லப்பா குடும்பம் ஜெப ஆராதனையில் கலந்துகொண்டு வீடு திரும்பும் வழியில் வேகமாக வந்த ஒரு வேன் உரசிச் சென்றதினால் கீழே விழுந்து சிறு சிறாய்ப்புகளுடன் கர்த்தரால் காப்பாற்றப்பட்டனர். 15 வயது சிறுவன் பிரேம் மஞ்சள்காமாலை மற்றும் கடுமை யான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு ஜெபத்தினால் சுகமாக்கப்பட்டார். பார்வதி தன்னுடைய கரும்பு விற்காத நிலையில் பொருத்தனைச் செய்து ஜெபித்த போது கரும்பு நல்ல விலைக்கு விற்க தேவன் உதவினதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுதேச ஊழியர் சந்தோஷ் மீதுள்ள மத துவேச வழக்கு சீக்கிரம் முடிவுக்கு வந்து நீதி கிடைக்க; பலபீட் ஆலய ஆராதனை மீண்டும் துவங்கப்பட; தன் கணவனை இழந்து ஒரு வயது குழந்தையுடன், விசுவாசியானதால் தன் கணவனின் குடும்பத்தினரால் கைவிடப்பட்ட நிலையில், கஷ்டப்படும் ஷில்பா தனது நியாயமான பங்கைப் பெற ஜெபிப்போம்.

### கஜேந்திரகடா:

**மஞ்ஜ்யா நாயக் & லமானி ரத்னா**

**துதிக்க:** பிறந்தவுடன் குழந்தையை இழக்கக் கொடுத்து மனஅழுத்தத்தி லிருந்த சரனப்பா என்பவரை நமது சுதேச ஊழியர் சந்தித்து இயேசுவின் அன்பை எடுத்துரைத்ததின் காரணமாக விசுவாசத்திற்குள் வந்த அடுத்த வருடமே நல்ல குழந்தைப் பிறக்க தேவன் கிருபை செய்தார். வீடு கட்ட அரசாங்க உதவிக்கு விண்ணப்பித்திருந்த சுஜாதா எந்தவித சிபாரிசுமின்றி உதவிவரப் பெற்று வீடுக் கட்டி முடிக்க தேவன் கிருபை செய்ததற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** வீட்டில் மன அமைதியின்றி ஆலயத்திற்கு ஜெபிக்க வருகின்ற ஜெயஸ்ரீ குடும்பத்தினருடன் இரட்சிக்கப்பட்டு மன நிம்மதி பெற; ஒப்பந்த அடிப்படையில் அரசாங்கப் பெண்கள் விடுதியில் பணிச்செய்யும் சௌரம்மாவின் பணி நிரந்தரமாக்கப்பட ஜெபிப்போம்.

### கானாப்பூர்: வினயராஜ் & சாந்தா

**துதிக்க:** கடிகுப்பா கிராமத்தில் நடத்தப்பட்ட பெண்கள் கூடுகையில் அநேக பெண்களும், இட்டாகி, கானாப்பூரா மற்றும் கடிகுப்பா கிராமங்களில் நடத்தப்பட்ட உபவாச ஜெபத்தில் அநேக விசுவாசிகளும் கலந்துகொண்டு தேவ ஆசீர்வாதம் பெற்றனர். மடிகன்ஜ் மற்றும் பிடீ கிராமங்களில் நடைபெற்ற பின்தொடர் ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்துத் தந்தார். சாப்காவ் கிராமத்தில் புதிதாகத் தொடங்கப்பட்ட ஆராதனை நல்லபடியாக வளர்ந்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திடீரென வீட்டைக் காலிசெய்யச் சொல்லி வீட்டு உரிமையாளர் அழுத்தம் கொடுப்பதால் திகைத்து நிற்கும் விசுவாசி சவிதா குடும்பத்தினருக்காக; சர்க்கரை வியாதி காரணத்தினால் காலில் புண் வந்து ஆறாமல் கஷ்டப்படும் பசப்பா குணமடைய; நமது ஊழியர் வினயராஜ் தன்னுடைய உடல் பலவீனத்திலிருந்து சீக்கிரம் குணமடைய ஜெபிப்போம்.

## 28 நவம்பர்
செவ்வாய்

### கௌரிபித்தனூர் & மதுகிரி:
**ஃப்ரான்சிஸ் துரைசாமி கே. & ஜெயந்தி பி.**

**துதிக்க:** நமது விசுவாசிகளின் பிள்ளைகள் திருமணத்திற்கு வந்திருந்த அநேக வேற்று நம்பிக்கையுடைய உறவினர்கள், கிராமத்தார் வியந்து பார்க்கும் வண்ணம் திருமணம் கிறிஸ்தவ முறைப்படிச் சிறப்பாக நடைபெற்றதற்காக; குடும்பப் பிரச்சினையின் காரணமாக மனஅழுத்தத்திற்குள்ளாகி தன்னை மறந்த நிலைக்குச் சென்றுவிட்ட ஜாய் ஜெபத்தின் மூலம் புத்தி சுவாதீனத்திற்கு திரும்பினதற்காக; நீண்டவருடங்களாக குழந்தைப் பாக்கியத்திற்காக ஜெபித்துவந்த திப்பையா – நரசம்மா தம்பதியினருக்கு தேவன் கொடுத்த அழகான குழந்தைக்காக துதிப்போம்.

**ஜெபிக்க:** அதிக கடன் பிரச்சினைக் காரணமாக குடும்பத்தில் சமாதானமின்றி தவிக்கும் ராஷ் – சில்பா தம்பதியினருக்காக; லக்சுமணம்மாவுக்கு பார்வை கோளாறு சரியாகவும்; ஆனந்தின் பேச்சு தெளிவாகவும், உறவினர்களால் துன்புறுத்தப்பட்டு செய்வினை கோளாறுக்கு ஆளாகியிருக்கும் லக்சிமிதேவம்மா ஜெபத்தின் மூலம் அனைத்து பிரச்சினைகளிலிருந்தும் விடுபட ஜெபிப்போம்.

### கோலார் பிராந்தியம்:
**திம்மேஷ் & கவிதா**

**துதிக்க:** 7 கிராமங்களில் 174 நபர்களுக்கு நேரடியாக சுவிசேஷப் பிரதிகள் கொடுக்கப்பட்டதற்காக; 2 நபர்கள் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டதற்காக; நம் விசுவாசி பெண் ஒருவர் ஆலய ஆராதனைக்குப்பின் தன் 2 குழந்தைகளையும் விட்டுவிட்டு எங்கோ சென்றுவிடவே கிராமத்தில் பெரிய பிரச்சினையானது. ஊக்கமாக பிற விசுவாசிகள் ஜெபிக்கவே 2 நாட்களுக்குப்பின் பத்திரமாக அந்த பெண் திரும்பி வந்ததினால் பிரச்சினை தீர்ந்ததற்காக; மருத்துவமனையில் பணியாற்றும் ரேஷ்மா ஆலயத்திற்கு வர ஞாயிறு விடுமுறை கிடைக்காமல் அதிக கவலையில் ஆழ்ந்தார். ஊக்கமாக ஜெபிக்கவே மருத்துவமனையில் இவருக்கு ஞாயிறு ஆலயத்திற்குப் போக சிறப்பு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆலயத்திற்கு வந்து தங்கள் தேவைகள் சந்திக்கப்பட்டபின் ஆலயம் வருவதை நிறுத்தினவர்கள் தேவனுடைய வல்லமையை உணர்ந்து மீண்டும் ஆலயம் வர; தன்னுடைய வீட்டிலே அதிக பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிற கங்கலும்மா ஜெபத்தினால் எல்லாவற்றையும் வெற்றிக்கொள்ள, மகள் சுகவீனத்தினால் தேவம்மா ஆலயம் வர தடைப்படுகிற காரியத்தில் தேவன் மகளுக்கு நல்ல சுகத்தை சீக்கிரம் தர ஜெபிப்போம்.

## 29 நவம்பர்
**புதன்** — *உபவாச ஜெபநாள்*

### கோலார்:
**டேவிட் பெருமாள் & ஸ்டெல்லா**

**துதிக்க:** பக்கவாதத்தால் பாதிக்கப் பட்டிருந்த வெங்கடச்சாமி ஜெபத்தினால், குணமடைந்து இரு சக்கர வாகனத்தில் வந்து ஆலய ஆராதனையில் கலந்துகொள்கின்றதற்காக; மூன்று வருடங்களாகப் பிசாசின் பிடியிலிருந்த பத்மா ஆலயம் வந்து ஜெபித்து விடுதலைப் பெற்றார். இரு சக்கர வாகனத்திலிருந்து கீழே விழுந்து கைவிரல் முறிந்த நிலையில் எண்ணெய் தடவி ஜெபித்த வெங்கடம்மா சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சொர்ணா மற்றும் சிந்து சகோதரிகளுக்கு குழந்தை பாக்கியத்தைத் தேவன் அருள; விசுவாசத்தில் பின் மாற்றமடைந்துள்ள லோகேஷ், ஜெகதீஷ், தாஸ் ஆகியோர் மீண்டும் விசுவாசத்தில் உறுதிப்படுத்தப்பட; குளிர்காலத்தில் சைனஸ் பிரச்சினையால் அவதிப்படுகிற நமது ஊழியர்களுக்காக ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

### தாமலச்செருவு:
**ஜாண் டேவிட்ராஜ் & ஞானசேகரி, அனில் மஹாலி & பிரசாந்தி**

**துதிக்க:** பாட்டூர் ஆலயத்தில் பௌர்ணமி முழுஇரவு ஜெபமும், தாமலச்செருவு ஆலயத்தில் அமாவாசை முழுஇரவு ஜெபமும் நடைபெற்றதில் அநேக விசுவாசிகள் கலந்துகொண்டு, ஆசீர் வதிக்கப்பட்டனர். சேகாபுரம் கிராமத்தில் புதிய தொடர்பாளர் கோபி வீட்டில் முதன்முறையாக நடைபெற்ற இரவுக் கூட்டத்தில் அநேக புதிய மக்கள் கலந்துகொண்டு நற்செய்தியினைக் கேட்டனர். நெல்லிமந்தப்பள்ளியைச் சேர்ந்த புதிய தொடர்பாளர் சுப்பிரமணி வீட்டின் மேல் கூரையின் மீதிருந்த பெரிய பாம்பு விழுந்தபோதும், அது அவரைத் தீண்டாதவாறு பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிசாசின் தாக்கத்தினின்று விடுதலைப் பெற்று கர்த்தரை ஆராதித்து வந்த தன்னிஓட்டப்பள்ளியைச் சேர்ந்த சரோஜாம்மா மகனின் வற்புறுத் தலால் விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்த நிலையில் மீண்டும் பிசாசின் தாக்கத்திற்குட்பட்டு அவதியுறுகிறார். பிரிந்து வாழும் தம்பதிகளான சுமன் – சுகன்யா, ரூத்மேரி– மதன், தானியேல்– ரூத், தனம்மா–சாலமோன் மீண்டும் சேர்ந்துவாழ ஜெபிப்போம்.

### குப்பம்: வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** 14 நபர்கள் கர்த்தரின் அன்பிற்குள் வந்ததற்காக; ஆறு வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள் நடத்தவும் அதில் சுமார் 1250 நபர்களுக்கு சுவிசேஷப் பிரதிகள் கொடுக்கவும் தேவன் கொடுத்த கிருபைக் காக; மூத்த ஊழியர் பிரசாந்தின் மகன் பெரிய விபத்திலிருந்து தெய்வாதீனமாகத் தப்பினதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு இருக்கும் ரமப்பா, அப்பாஜி, ரங்கீலா சகோதரி மற்றும் ரமேஷ் ஜெபத்தினால் சுகம்பெற; படுத்தப்படுக்கையாக இருக்கும் கிருஷ்ணப்பா மற்றும் சித்தாம்மா குணம் பெற; அடிக்கடி சுகவீனப்படும் நமது சுதேச ஊழியரின் மனைவி சாந்திபிரியா குணமாக ஜெபிப்போம்.

## 30 நவம்பர் வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. சுகந்தி புஷ்பம் ஜென்னிஸ்

### நல்லமடா:

### தினேஷ் மறையா & மேரி முர்மு

**துதிக்க:** சபையில் நடைபெற்ற ஜெபம் மற்றும் சமாதான முயற்சி மூலமாக பிரிந்து வாழ்ந்த விசுவாசி சுனிதா தன் கணவருடன் சேர்ந்துவாழத் தொடங்கினதற்காக; செவிலியர் பயிற்சிக்கு கல்லூரியில் இடம் கிடைக்காமல் சோர்ந்துபோயிருந்த ராகனப்பள்ளி கிராம அனுபேடாவுக்கு ஜெபத்தினால் கல்லூரியிலிருந்து கடிதம் வரப்பெற்று படிக்க இடம் பெற்றுள்ளதற்காக; 7 கிராமங்களில் வீடு வீடாக மக்களை சந்தித்து சுவிசேஷ கைப்பிரதிகள் கொடுக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திட்டமிடப்பட்டிருக்கின்ற வெளிப்புற நற்செய்தி கூட்டங்கள், வீடு சந்திப்பு, திரைப்படக் காட்சி, தேடுவோர் முகாம் சிறப்பாக எந்தவொரு தடையுமின்றி நடந்தேற; புதிய தொடர்பாளர்களான லஷ்மி தேவி, பாக்யம்மா, ஹார்சா, ஹர்சிதா, நர்ஷிமுடு, நாகேந்ரா ஆகியோர் இன்னும் விசுவாசத்தில் வளர; ராகனப்பள்ளி, ராமாவரம் ஆகிய கிராமங்களில் சிறு ஆராதனைக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.

# தமிழ்நாடு

### மிச்சேரி:

### தர்மராஜ் ஆர். ஆர். & மரியசெல்வி

**துதிக்க:** புக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கண்ணையன் இரு சக்கர வாகனத்தில் தன் மகனின் பின்னால் அமர்ந்து போய் கொண்டிருந்த பொழுது கீழேத் தவறி விழுந்தாலும் அதிகம் அடிபடாமல் கர்த்தர் காத்துக்கொண்டதற்காக; முனுசாமியின் மகன் ஜோஷ்வா தான் விரும்பிய பாடம் கிடைத்து கல்லூரியில் பயின்று வருவதற்காக; சுகவீனத்தினால் அதிகமாகப் பலவீனப்பட்ட நிலையிலிருந்த துரைச்சாமியின் மனைவி அனிதா நல்ல சுகம்பெற்று வருவதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திருமணமாகி 10 வருடங்களாக குழந்தை பாக்கியத்திற்காக காத்துக்கொண்டிருக்கும் சதீஷ் நித்தியா தம்பதியினருக்கு தேவன் குழந்தை பாக்கியத்தை அருள; மோகன் மற்றும் ஜான் பிரபு இவர்களின் கடன் பிரச்சினைத் தீர; நமது ஊழியரின் மகன் திருமணம் சிறப்பாக நடைபெற ஜெபிப்போம்.

## தாயைப் போல தாங்குகின்ற கர்த்தர்!

*சக்கிதேவ் கிராமத்தின் நல்ல விசுவாசி சகோதரி. சக்கிஷா. கர்த்தரிடத்தில் தன்னுடைய குழந்தை பாக்கியத்திற்காக விண்ணப்பம் செய்து தேவகிருபையால் கர்ப்பமடைந்தார். தினமும் ஜெபித்து தேவ பெலத்தைப் பெற்றுகொண்டு மற்ற வீட்டு வேலைகளையும் தொடர்ந்து செய்துவர கர்த்தர் கிருபை செய்தார். நிறைமாத கர்ப்பிணியாக தன்னுடைய பிரசவ தினத்தை எதிர்நோக்கியிருந்த சக்கிஷா, வீட்டு வேலை செய்து கொண்டிருந்தபோது கீழே விழுந்து விட்டார். அவரின் சத்தம் கேட்டு வீட்டிலிருந்தவர்கள் ஓடி வந்து பார்க்கும்போது எந்தவித உடல்பாதிப்புமின்றி அழகான குழந்தையை ஈன்றெடுத்தார். மருத்துவமனையோ தூர இடத்தில் இருக்கிறது. வாகன வசதியோ மிகக் குறைவு. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில் கர்த்தரின் கரம் சக்கிஷாவுடனிருந்து ஒரு தாய் தாங்குவதுபோல தாங்கினது. சகோதரியின் குடும்பம் மட்டுமன்றி ஊராரும் கர்த்தரின் செய்கையைக் குறித்து ஆச்சரியப்பட்டனர். தேவ நாமம் மகிமைப்பட்டது.*

389 மிஷனரி ஆல்பம்



## திரு. ஹோசியல் நாயக் & திருமதி. கீதாஞ்சலி நாயக் குடும்பம்

திரு. ஹோசியல் நாயக் ஒடிசாவிலுள்ள கந்தமால் மாவட்டத்தில் திரு. ஹிமன்சு சி. ஹெச். நாயக் மற்றும் திருமதி. பாக்கிமதி நாயக் அவர்களுக்கு மகனாக 01.06.1978-ல் பிறந்து, கிறிஸ்தவ முறைப்படி வளர்க்கப்பட்டார். அவருக்கு ஆலயம் செல்லவோ, ஜெபிக்கவோ, வேதம் வாசிக்கவோ ஆர்வம் இல்லாதபோதிலும் தன் பெற்றோருக்காக இவைகளைச் செய்து வந்தார். 1989 ஆகஸ்டு 9-ம் தேதி ஒரு ஜெபக்கூடுகையில் பாவ உணர்வடைந்து தன் பாவங்களை அறிக்கையிட்டபோது பரிசுத்த ஆவியினால் நிறைக்கப்பட்டார். இந்த அனுபவம் சில வருடங்கள் மாத்திரமே இருந்தது. பல தவறான நண்பர்களோடு பழக்கம் ஏற்பட்டதால் தேவனைவிட்டு தூரம் சென்றுவிட்டார். அதன்பின் படிப்பிலும் ஆர்வம் இல்லாத காரணத்தினால் 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் தோல்வியைத் தழுவினார். மாறாக, விளையாட்டில் அதிக ஆர்வம் இருந்தது. அவருடைய கீழ்ப்படியாத சூழ்நிலையிலும் தேவன் அவரை நேசித்ததினிமித்தம் 3 நாட்கள் அவரின் ஆலயத்தில் நடைபெற்ற உபவாசக் கூட்டத்தில் கலந்துகொள்ள தேவன் ஒரு வாய்ப்பினைக் கொடுத்தார். அதில் ஒரு தேவனுடைய மனிதன் ஹோசியலை நோக்கி: 'உன் பாவவாழ்வின் மத்தியிலும் தேவன் உன்னை நேசித்து உன்னைப் போதக ஊழியத்திற்குத் தெரிந்துகொண்டிருக்கிறார்' என்று அவரைக் குறித்து தீர்க்கத்தரிசனம் உரைத்தார். அவர் மேலும், '3 நாட்கள் உபவாசித்து ஜெபித்தால் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றயடைவாய் என்றுக் கூறினார். அவ்வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து ஜெபித்ததினிமித்தம் 12-ம் வகுப்பில் அதிக மதிப்பெண்களோடு வெற்றிப்பெற்றார். அதைத்தொடர்ந்து தேவன் தன்னோடு இருக்கிறார் என்பதை அவருக்கு உணர வைத்து எல்லா சூழ்நிலையிலும் தேவன் நல்லவராகவே இருக்கிறார் என்ற உண்மைக்கு அவர் கண்கள் திறக்கப்பட்டது. எரே.29:11 வசனம் கூறுவது போல் தேவன் அவரைக் குறித்து பல திட்டங்களை நன்மைக்காக வைத்திருக்கிறார் என்பதை அறிந்து தேவ ஊழியம் செய்யத் தன்னை அர்ப்பணித்தார். 12.04.1998-ம் ஆண்டு கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கப்பட்டார். அதன்பின் தேவ அழைப்பை ஏற்று ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் தன்னார்வப் பணியாளராய் இணைந்தார். அதன்பின் B.Th., முடிப்பதற்கும் தேவன் கிருபைசெய்தார். அந்நாட்களில் FMPB-ல் ஊழியம் செய்து வந்த அவரின் சகோதரி. அர்ச்சனா நாயக்கின் எளிமை மற்றும் சாட்சியுள்ள வாழ்வு அவரைப் பெரிதும் ஈர்த்தது. எனவே, 2009 ஜூன் 9-ம் தேதி FMPB-ல் முழு நேர ஊழியராக இணைந்தார். சுவிசேஷ ரதம் – தென் இந்தியா மற்றும் வட இந்தியாவிலும் அதைத் தொடர்ந்து தேசிய மிஷனரி பயிற்சி மையத்திலும், 2 ஆண்டுகள் கான்பூர் பிராந்திய அலுவலகத்திலும் தேவ ஊழியத்தை நிறைவேற்றினார்.

திரு. சுரேஷ் நாயக் மற்றும் திருமதி. அனுசியா நாயக் அவர்களுக்கு மகளாக சகோதரி. கீதாஞ்சலி நாயக் அவர்கள் 18.04.1985-ம் ஆண்டு பிறந்தார். திரு. ஹோசியல் நாயக் அவர்கள் இவரை 12.06.2012 அன்று திருமணம் செய்தார். பின்பு ஒரு வருடம் ஊழியர்கள் பயிற்சியை முடித்தப்பின் குடும்பமாக குணா பணித்தளத்தில் 5 வருடக்காலமும், கடோரா பணித்தளத்தில் 6 வருடக்காலமும் ஊழியம் செய்தனர். தற்போது முரைனா பணித்தளத்தில் தேவ ஊழியத்தை நிறைவேற்றி வருகின்றனர். இவர்களின் குடும்பம் 2 மகன்களுடன் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளது. 05.04.2013 அன்று பிறந்த இத்தேல் நாயக் டெஹ்ராடூனிலுள்ள கிரேஸ் அகாடமியில் 5-ம் வகுப்பும், இளைய மகள் அஸ்ரியேல் நாயக் 13.02.2019-ல் பிறந்த அவர் பெற்றோருடன் இருந்து செயின்ட் மேரிஸ் பள்ளியில் LKG படித்து வருகிறார். இக்குடும்பத்தை நமது ஜெபத்தில் நினைவு கூருவோம்.

Regd. Newspaper for India No.17759/69

# நிதி அலுவலகத்திலிருந்து

Online Banking

## இணையதளம் வாயிலாக காணிக்கை அனுப்புவதற்கான விபரங்கள்

A/c Name: **FRIENDS MISSIONARY PRAYER BAND**

ICICI - A/c No. 602701216912 - IFS Code ICIC0006027 - Branch: Anna Nagar

**ICICI Bank UPI ID: fmpb01@icici**

SBI - A/c No. 10402752621 - IFS Code SBIN0000987 - Branch: Ambattur

Indian Bank - A/c No. 406157474 - IFS Code IDIB000A599 - Branch: Venkatapuram

தாங்கள் காணிக்கை அனுப்புகிறபோது remark column பகுதியில் தங்களது பெயர், விலாசம் மற்றும் பிரத்தியேக எண் ஆகியவற்றைப் பூர்த்திசெய்து அனுப்பவும். முதல் முறையாக online-இல் அனுப்பும்போது முகவரியுடன் எந்த வகை ஊழியத்திற்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதையும் **receiptsfinance@fmpb.org** என்ற மின்னஞ்சல் வழியாக, **WhatsApp: 7904648270** உடனுக்குடன் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

**கௌரவ முன்னேற்றப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத் தலைவர்கள் கவனத்திற்கு:**
காணிக்கை செலுத்தும் படிவத்தில் தங்களின் கைப்பேசி எண்ணை தயவுசெய்து தெரியப்படுத்துங்கள்.

## நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் கவனத்திற்கு....

இணையதளம் மூலமாக பணம் பரிவர்த்தனை செய்ய, பாரத ஸ்டேட் வங்கியில் கட்டண நுழைவாயில் **(Payment gateway)** மூலமாக அனைவரும் பணம் செலுத்தும் வசதி பெற்றுள்ளோம். நன்கொடையாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**FMPB SB COLLECT** என்ற இணையதளத்தின் மூலமாக பணம் அனுப்பும்போது எந்த நோக்கத்திற்காக பணம் செலுத்துகிறீர்கள் என்பதைத் தெரிவிக்கும்படி பட்சமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண நுழைவாயிலுக்குள் நுழைவதற்கு உங்கள் இணையதளத்தில் **FMPB SB COLLECT Online subscription** என்ற வார்த்தைகளைப் பதிவு செய்து பிற தகவல்களையும் பரிமாற்றம் செய்ய தயவுடன் வேண்டுகிறோம்.

Online Fund Transfer

In google search type: **FMPB SB Collect**
it will show **State Bank Collect - Online SBI**

**Tick the box**

☑ (Click check box to proceed for payment)

**Proceed** State of Corporate / Institution: Select **All India**

Type of Corporate / Institution: Select **Religious Institutions**

**Go** Religious Institutions Name: **Friends Missionary Prayer Band**

**Submit** Select Payment Category: **Donations and subscriptions**

***Published by:*** S. John Berlin on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. John Berlin***